ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-9) பக்கம் 3

உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர் (தொடர்ச்சி....) பக்கம் 8

முஹர்ரம் மாதமும் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயர் தகுதியும் (தொடர்ச்சி....) பக்கம் 11

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சி – இன்றைய தலைமைத்துவத்திற்கு ஒரு வழிகாட்டும் விளக்காகும் பக்கம் 16



மாத இதழ்



# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | September 2022 | Issue No. 10



Ahmadiyya Muslim Jama’at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340



# திருக்குர்ஆன்

لَا تَقُمْ فِيْهِ اَبَدًا ؕ لَمَسْجِدٌ اُسِّسَ عَلَى
التَّقْوٰى مِنْ اَوَّلِ يَوْمٍ اَحَقُّ اَنْ تَقُوْمَ فِيْهِ ؕ
فِيْهِ رِجَالٌ يُّحِبُّوْنَ اَنْ يَّتَطَهَّرُوْا ؕ وَاللّٰهُ
يُحِبُّ الْمُطَّهِّرِيْنَ

(நபியே!) நீர் அ(ந்த மஸ்ஜி)தில் ஒருபோதும் நிற்க வேண்டாம். ஆரம்ப நாளிலிருந்தே இறையச்சத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட பள்ளிதான் (தொழுகை நடத்துவதற்காக) நீர் நிற்பதற்கு மிகவும் தகுதி வாய்ந்ததாகும். முற்றிலும் தூயவர்களாக வேண்டுமென்று விரும்புபவர்கள் அதில் (வருபவர்களாக) இருக்கின்றனர். மேலும் அல்லாஹ், முழுமையான தூய்மையை மேற்கொள்பவர்களை நேசிக்கின்றான். (9:108)




# ஹதீஸ்

حَدَّثَنَا أَبُو بَكْرِ بْنُ أَبِي شَيْبَةَ، حَدَّثَنَا يُونُسُ بْنُ مُحَمَّدٍ، حَدَّثَنَا
لَيْثُ بْنُ سَعْدٍ، ح وَحَدَّثَنَا أَبُو بَكْرِ بْنُ أَبِي شَيْبَةَ، حَدَّثَنَا دَاوُدُ بْنُ
عَبْدِ اللَّهِ الْجَعْفَرِيُّ، عَنْ عَبْدِ الْعَزِيزِ بْنِ مُحَمَّدٍ، جَمِيعًا عَنْ يَزِيدَ
بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أُسَامَةَ بْنِ الْهَادِ، عَنِ الْوَلِيدِ بْنِ أَبِي الْوَلِيدِ، عَنْ
عُثْمَانَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ سُرَاقَةَ الْعَدَوِيِّ، عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ،
قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ يَقُولُ " مَنْ بَنَى
مَسْجِدًا يُذْكَرُ فِيهِ اسْمُ اللَّهِ بَنَى اللَّهُ لَهُ بَيْتًا فِي الْجَنَّةِ " .

ஹஸ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். “எவர் ஒருவர் ஒரு பள்ளிவாசலைக் கட்டி, அதில் அல்லாஹ்வின் பெயர் கூறப்படுகிறதோ அவருக்காக அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவான்.”

(இப்னு மாஜா ஹதீஸ் எண் 735)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

9

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## மக்கள் மத்தியில்

சத்யார்த் பிரகாஷ் என்னும் தமது நூலில் சுவாமி தயானந்த், முஸ்லிம்கள் தங்களின் சகமதத்தவர்களை இந்துக்கள் என்று கூறுவதன் மூலம் இழிவுபடுத்துகின்றனர். ஏனென்றால் 'ஹிந்து' என்றால் அடிமை என்று பொருள் என்று குறிப்பிட்டிருந்தார். (இந்தச் செய்தி சத்யார்த் பிரகாஷ் முதல் பதிப்பு, ஸ்டார் அச்சகம், வாரணாசி 1875 அதிகாரம் 3 பக்கம் 67–ல் காணப்படுகிறது. இந்நூலின் பிந்தைய பதிப்புகளில் இந்தச் செய்தி காணப்படவில்லை.)

இது ஒரு விஷமத்தனமான கருத்தாக இருந்ததால் இதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு மறுப்பு எழுதினார்கள். அது அமிர்தசரஸிலிருந்து வெளிவரும் வக்கீல் என்ற பத்திரிகையில் 1879 அல்லது 1881 –ல் வெளிவந்தது. இதில் சுவாமியின் மேற்சொன்ன கருத்தை மறுத்து இஸ்லாம் தோன்றுவதற்கு நீண்டகாலம் முன்பிருந்தே இந்தியர்களைக் குறிப்பிடுவதற்கு 'ஹிந்து; என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதை எடுத்துக் காட்டினார்கள். இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்த அரேபிய நூல்களில் ஹிந்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருந்தார்கள். மகேஷ், சந்த், அருட்திரு. தாமஸ் ஹோவெல் போன்றவர்களும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இந்தக் கருத்தை ஆதரித்து பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினார்கள்.

மறுபிறவிக் கொள்கையை மறுத்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் நீண்ட கட்டுரை எழுதினார்கள். அது லாஹூரிலிருந்து வெளிவந்த 'ஹிந்து பந்து' என்னும் பத்திரிகையில் 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாத இதழ்களில் வெளிவந்தது. அக்கட்டுரையின் இன்னொரு பகுதியை பத்திரிகையின் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது கட்டுரைத் தொடரில் எழுப்பியிருந்த அற்புதமான வாதங்களுக்கு ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களால் பதிலளிக்க முடியாத காரணத்தால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அனுப்பிய அடுத்த தொடரை அவர் வெளியிடவில்லை. காதியானைச் சேர்ந்த ஷரம்பத் ராய் என்பவர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் புகழ்பெற விரும்பினார். அவர் தாமே ஒரு கட்டுரை எழுதி 'ஹிந்து பந்து' பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பினார். ஆனால் அவருடைய அறியாமையையும், கட்டுரையில் உள்ள கருத்துக்களையும் பத்திரிகை ஆசிரியர் வெளிப்படையாகக் குறை கூறியதால் தர்ம சங்கடத்திற்கு ஆளானார்.

1879 –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சிவ நாராயண் அக்னி ஹோத்ரி என்பவருடன் இறை வெளிப்பாடுகள் தொடர்பாக ஒரு விவாதம் நடத்தினார்கள். இது தொடர்பாகப் பல கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பிற்காலத்தில் அவை பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன என்று தெரிகிறது. அக்னி ஹோத்ரி லாஹூரிலுள்ள ஓர் அரசுப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரே 'ஹிந்து பந்து' பத்திரிகையின் ஆசிரியரும் அதிபரும் ஆவார். பிரம்ம சமாஜ அமைப்பின் தலைவராகவும் கருதப்பட்டார். அந்த அமைப்பு இறை அறிவிப்புகள் கிடப்பதை மறுத்து வந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடு அவர் நடத்திய விவாதம் 1879 ஆம் ஆண்டு மே 21 ஆம் நாள் முதல் ஜூன் 17 ஆம் நாள் வரை நீடித்தது. அக்னி ஹோத்ரியின் விஷயத்திலும் காரக் சிங்கிற்கு நிகழ்ந்தது போலவே நடந்தது. தம்முடைய வாழ்நாளின் பிற்பகுதியில் அவர் பிரம்ம சமாஜத்தை விட்டு வெளியேறினார். எதிரிகள் மனதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஏற்படுத்திய தாக்கம் வியப்புக்குரிய விதத்தில் வேலை செய்தது. அவர்கள் தம் கொள்கைக்காக வரிந்து கட்டிக் கொண்டு வாதிட முன் வந்தனர். ஆனால் முடிவில் தம் கொள்கைகளில் இருந்த தவறுகளை உணர்ந்து கொண்டவர்களாகத் திரும்பிச் சென்றனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஆன்மீக ஆற்றல் அத்துணை வலிமையுடையதாக இருந்தது! இறையறிவிப்பு என்று ஒன்று இருப்பதையே அக்னிஹோத்ரி மறுத்து வந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கொள்கைகளை மறுப்பதற்காகவே அவற்றைப் படித்தார். ஆனால் ஒருகாலம் வந்தது. அப்போது அவர் பிரம்மசமாஜத்தோடு தமக்கிருந்த தொடர்பையே துண்டித்துக் கொண்டார். தாமே இறையறிவிப்புகளைப் பெறுவதாகக்

கூறினார். பிற்காலத்தில் தம் சொந்த சபையான ‘தேவ் சமாஜம்’ என்ற அமைப்பைத் துவங்கினார். அவரது வாதம் சரியானதா? அல்லது தவறானதா என்பது வேறு விஷயம். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எழுத்துக்கள் அவரிடம் ஓர் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வந்தன என்பது மட்டும் உண்மை. அதன் காரணமாக எந்தக் கொள்கையை மறுக்க அவர் முன் வந்தாரோ அதே கொள்கையை அவரே போதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். சிந்திப்பதற்கு இதில் போதுமான விஷயம் இருக்கிறது.

## இஸ்லாமியப் பணி


ஆரம்பத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவதன் பக்கம் மட்டும் கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தின் மீதான தங்கள் தாக்குதல்களை அதிகரித்த பொழுது முஸ்லிம்கள் அதனை எதிர்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். இதனைக் கண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உணர்வு கிளர்ந்தெழுந்தது. ஓர் இறையறிவிப்பிற் கிணங்க அவர்கள் ஒரு நூல் எழுதத் தீர்மானித்தார்கள். எதிரிகளின் அனைத்து ஆட்சேபணைகளையும் முறியடித்து அவர்கள் இஸ்லாத்திற்கெதிராக குரலெழுப்பத் துணியாத அளவிலான ஆதாரங்களையும், அப்படியே அந்த எதிரிகள் ஆட்சேபணைகளை எழுப்பினாலும், அதற்கும் தக்க பதில் தரும் அளவுக்கு முஸ்லிம்களை ஆயத்தப்படுத்தும் விதத்தில் வாதங்களையும் எடுத்து வைக்க முடிவு செய்தார்கள். இந்த உறுதிப்பாட்டோடு மிகப்பெரிய நூலான ‘பராஹீனே அஹ்மதிய்யா’ என்னும் நூலை எழுத ஆரம்பித்தார்கள். இதன் மூலம் 1864 அல்லது 1865 –ம் ஆண்டில் அவர்கள் கண்ட ஓர் ஆன்மீகக் காட்சி நிறைவேறியது. அந்தக் காட்சியில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் கையில் நூல் ஒன்றை வைத்திருந்தார்கள். அந்நூல் அவர்களே எழுதியது போல் தோற்றமளித்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கைபட்டதும் அது ஓர் அழகிய பழமாக மாறியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பழத்தை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக வெட்டினார்கள். அப்போது அதிலிருந்து பெருமளவில் தேன் சொட்டியது. இறந்த ஒரு மனிதனை உயிர் பெற்றெழச் செய்வதாகவும் அந்தக் காட்சியில் கண்டார்கள்.

அந்நூலின் ஒரு பகுதி (சுமார் 2500 பக்கங்களைக் கொண்டது) 1879 –ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. அப்போது அது தொடர்பாக ஓர் அறிவிப்பு ஸஃபீமா இஷாஅத்துஸ் ஸுன்னா என்னும் ஒரு பத்திரிகையில் வெளிவந்தது. அந்த அறிவிப்பில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“ஆரிய சமாஜத்தினரின் கொள்கைகளின் காரணமாக இந்த நூலை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர்கள் மூஸா (அலை), ஈஸா (அலை), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆகிய இறைதூதர்களைப் பொய்யர்கள் என்றும், அவர்கள் கொண்டுவந்த வேத நூல்கள் பொய்யானவை என்றும் போதிக்கின்றனர். எல்லா புனிதவான்கள் மீதும் அவதூறுகளை அள்ளி இறைப்பதைத் தம் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.”

ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஒருவர் ஸஃபீரே ஹிந்த் என்ற பத்திரிகை வாயிலாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு இது தொடர்பாக நீண்டகாலமாக சவால் விடுத்து வந்தார். இந்த நூலை வெளியிடுவதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் போதிய பணவசதி இல்லாமல் இருந்தது. அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அதன் பின் கிடைத்த ஓர் இறைகட்டளைக்கிணங்க மக்களிடம் இந்தப் பணிக்காக நன்கொடை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த நூலை வாங்கும் எண்ணம் கொண்டோர் முன்னதாகவே பணம் செலுத்துவதன் மூலம் நூல் வெளிவர உதவுமாறு கேட்டுக் கொண்டார்கள். அப்போது முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய வறுமையின் காரணமாகவும் மார்க்க விவகாரங்களில் அவர்களின் ஆர்வமில்லாத தன்மை காரணமாகவும் அந்த வேண்டுகோளுக்கு அதிக பலன் எதுவும் ஏற்படவில்லை. இருந்த போதிலும் சிறு நன்கொடைகளும், சிறிதளவு முன்பணமும் கிடைத்தன. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதனைக் கொண்டு நூல் வெளிவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். பட்டியாலாவைச் சேர்ந்த கலீஃபா செய்யது முஹம்மது ஹுஸைன் என்பவர் முதன் முதலில் ₹ 250/– நன்கொடை வழங்கும் பாக்கியம் பெற்றார். அதைத் தொடர்ந்து மேலும் சிலர் நன்கொடை வழங்கினர்.





அந்நூலின் முதல் இரண்டு பாகங்கள் 1880 –ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. அதில் முதல் பாகம் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட ஓர் அறிக்கையாக அமைந்தது. அது மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளை விரிவாக எடுத்துக் கூறியிருந்தார்கள். வேறு மார்க்கத்தைச் சேர்ந்த எவராவது ஒருவர் அதைப் போன்ற சிறப்புகள் தமது மார்க்கத்திலும் இருப்பதாகவோ அல்லது பாதி அல்லது நான்கில் ஒரு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு தமது மார்க்கத்திலும் இருப்பதாக நிரூபித்தாலோ அல்லது அந்நூலில் திருக்குர்ஆனின் மேன்மைக்குச் சான்றாகத் தாம் எடுத்து வைத்திருக்கும் வாதங்களை மறுத்தாலோ தாம் அவருக்காக ₹ 10,000/– மதிப்புள்ள சொத்தை பரிசாக வழங்குவதாக அறிவித்திருந்தார்கள்.

மூன்றாம் பாகம் 1882 ஆம் ஆண்டும் நான்காம் பாகம் 1884 ஆம் ஆண்டும் வெளிவந்தன. பல்வேறு காரணங்களால் நூல் வெளிவருவதில் காலதாமதம் ஏற்பட்டது. நூலை அச்சிட்டு வந்த அமிர்தசரஸ் ஸஃபீரே ஹிந்த் அச்சக உரிமையாளரின் உடல்நலக் குறைவு முக்கியமான காரணமாக அமைந்தது. அவர் ஒரு கிறித்தவர் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நான்காவது பாகம் வெளியிடுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்குக் காரணம், முதல் மூன்று பாகங்களுக்கு எதிராக வெளியான ஆட்சேபணைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1883 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மூத்த சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் அவர்களின் மரணமும் தாமதத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது.

ஐந்தாவது பாகம் 1905 ஆம் ஆண்டு வெளிவந்தது. அது முதல் நான்கு பாகங்களின் தொடர்ச்சியாக இல்லாமல் முற்றிலும் புதிய நூலாக அமைந்திருந்தது. உண்மையில் 300 வாதங்களைக் கொண்ட அந்நூல் 1879 –ஆம் ஆண்டு மே மாதமே எழுதி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. 300 வாதங்களில் ஒரே ஒரு வாதம் மட்டும் தான் முதலில் விவரிக்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என அவர்கள் அறிவித்த 1882 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகள் காரணமாக அந்நூலுக்காத் தாம் கையெழுத்துப் பிரதியாக எழுதி வைத்திருந்த அனைத்து விஷயங்களையும் அச்சிட்டு வெளியிட இயலவில்லை. அவர்களுக்கு இவ்வாறு இறையறிவிப்பு வந்தது: ‘‘குல் இன்னீ உமிர்த்து வஅனா அவ்வலுல் முஸ்லிமீன் – பொருள்: கூறுவீராக! நான் நியமிக்கப்பட்டுள்ளேன்; கீழ்ப்படிபவர்களுள் நான் முதல்வனாக இருக்கிறேன்.’’ நீண்ட காலத்திற்குப் பின்னர் தான் அவர்கள் இந்தப் பணியை முறைப்படி செய்தார்கள். அது இஸ்லாத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சிறந்த வழிமுறையாக அமைந்தது. அந்நூலின் முந்தைய பாகங்களில் கூறப்பட்டிருந்த முன்னறிவிப்புகள் நிறைவேறி இருந்தன என்பது மட்டும் அல்லாமல், இஸ்லாத்தின் மேன்மையை விளக்கும் மிகச் சிறந்த ஆதாரங்களை இடைப்பட்ட காலத்தில் இறைவன் வழங்கி இருந்தான். எனவே பழைய வாதங்களின் தேவை இல்லாமல் போய் விட்டது. அச்சிட்டு வெளியிடப்படாத அந்நூலின் கையெழுத்துப் பிரதிகளை அதற்கெனத் தனியாகச் செய்யப்பட்ட ஒரு பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வந்தார்கள். ஆயினும் அவை பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் எரிந்து விட்டன என்று கூறப்படுகிறது.

நூலின் விலையைப் பற்றி அன்னாரின் எதிரிகள் ஆட்சேபணை எழுப்பினார்கள். முதலில் 1879 –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்தது என்னவென்றால், முன் பணமாக ₹5/– செலுத்தும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றும் 15 ஜுஸ்வுகளைக் கொண்ட (ஒரு ஜுஸ்வு என்பது பெரிய தாளில் 4 பக்கங்களைக் கொண்டது) 10 பாகங்கள் வழங்கப்படும் என்பதாகும். பொருள் வசதிபடைத்த முஸ்லிம்கள் பலரும் இந்தப் பணிக்காகப் பெருமளவில் உதவி செய்வார்கள் என அவர்கள் அந்நேரம் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மக்களிடம் ஆர்வமில்லை. மேலும் நூலின் தயாரிப்புச் செலவும் பிரதி ஒன்றுக்கு ₹ 25/– வரை ஆனது. எனவே அவர்கள் முஸ்லிம்களுக்கு ₹10/–க்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ₹25/–க்கும் வழங்குவதாக அறிவித்தார்கள். மார்க்கத்தின் நன்மைக்காகவும், சேவைக்காகவும் அந்நூலை அவர்கள் மத்தியில் பெரிதும் பரப்ப எண்ணினார்கள். அந்நூலின் பல பிரதிகளை அவர்கள் இலவசமாக அனுப்பினார்கள். வாங்குவார்கள் அல்லது திருப்பி அனுப்புவார்கள் என்ற நம்பிக்கையில் பலருக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நூல் எழுதி முடித்ததும் எவ்வளவு பெரிதாக அமையும் என்று அவர்களாலேயே கணிக்க முடியவில்லை. எனவே எவ்வளவு காலத்திற்குள் அது அச்சிட்டு வெளியிடப்படும் என்ற காலக்கெடு எதுவும் அவர்கள் நிர்ணயிக்கவில்லை. 1884 –ஆம் ஆண்டு 4 பாகங்கள் வெளியிடப்பட்டன. அவை 150 ஜுஸ்வுகள் வரை இருந்தன. இதுவே அவர்கள் முதலில் வாக்குறுதி அளித்த அளவாகும். எனவே வியாபார நோக்கில் இதை நாம் அணுகினோம் என்றால், ஆரம்பத்தில் முன் பணம் செலுத்தியவர்களுக்கு அவர்கள் செலுத்திய பணத்தின் மதிப்புக்கு நூல்கள் கிடைத்துவிட்டன.

1886 –ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நூல் வெளிவரும் விஷயத்தில் ஆரம்பத்தில் போடப்பட்ட திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டதால், தாம் முதலில் நினைத்தபடி 300 ஜுஸ்வுகள் வெளியிட வேண்டிய தேவை இல்லை என்று தாம் கருதுவதாக

அறிவித்தார்கள். பிற்காலத்தில் இறைவன் அவர்களை இந்தக் காலத்திற்கான சீர்திருத்தவாதியாகத் தேர்ந்தெடுத்ததனால், தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி நூலை வெளியிட முடியாது என்று அறிந்தபோது, தாம் ஏற்கனவே அனுப்பி வைத்த பிரதிகளை மக்கள் திருப்பி அனுப்பி வைத்தால், தாம் முன்பணமாகப் பெற்ற தொகையை அவர்களுக்கு திருப்பி அனுப்பி விடுவதாக அறிவித்தார்கள். கணிசமான மக்கள் இந்த அறிவிப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் பணத்தைத் திரும்பப் பெற்றனர். இந்த அறிவிப்பு மே 1893, 1895, 15.12.1900 எனப் பலமுறை வெளி–யிடப்பட்டது. இந்தப் பணியின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டும் என அவர்கள் ஒருபோதும் எண்ணியதில்லை. இதன் மூலம் எந்த இலாபமும் சம்பாதிக்கவில்லை என்பது உண்மையாகும்.

மிகப் பிரமாண்டமான இந்த நூலை வெளியிடுவதற்காக உதவிகோரி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் தோழர்களை யாரிடமும் கையேந்தி நிற்பதற்கு அனுமதிக்கவில்லை. லூதியானாவைச் சேர்ந்த மீர் அப்பாஸ் அலீ என்பவருக்கு 1883 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 –ஆம் நாள் எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

"இது வானங்களையும், பூமியையும் படைத்த இறைவனின் வேலையாகும். நீங்களோ நானோ உலகை நேசிக்கும் மக்கள் முன் இந்தப் பணிக்காக கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அது இறைவனுக்குச் செய்யப்படும் அவமரியாதையாக அமையும். அவன் மீது நம்பிக்கை வைக்கும் மக்கள் நம்பிக்கையற்றோரின் வாசற் கதவுகளைத் தட்டுவதில்லை. அவர்கள் கைகட்டி நிற்பதில்லை. நீங்கள் இந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள். யாராவது ஒரு பணக்காரரிடம் நீங்கள் ஏதேனும் கூற வேண்டியதிருந்தால் சுருக்கமாக விஷயத்தை மட்டும் கூறுங்கள்; ஒருமுறை மட்டும் அவரிடம் கேளுங்கள். எளிய முஸ்லிம்களை மட்டும் அணுகுங்கள். மற்றவர்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். இந்த விஷயத்திலும் சற்றும் தயங்காதீர்கள்."



இதற்கு ஒரு வருடத்திற்கு முன் அவருக்கு எழுதிய கடிதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

"இறைவனுக்காக மட்டுமே இந்தப் பணி மேற்கொள்ளப் பட்டிருப்பதால், இது நடைபெற வேண்டும் என்று அவன் நாடி இருப்பதால் இலாப நோக்கம் கொண்ட மக்கள் இந்த நூலை வாங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இது வியாபார நோக்கம் கொண்டு செய்யப்படும் பணி இல்லை என்பதால், மார்க்கத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக மட்டும் இதற்கு உதவுவார்கள் என்றால் அது சாலச் சிறந்ததாகவும், அருளுக்குரியதாகவும் அமையும்."

லூதியானாவிலுள்ள ஷா தீன் என்ற பணக்காரர் ஒருவருக்கு ஒரு பிரதியை அனுப்பி வைக்கும்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மீர் அப்பாஸ் அலீ கேட்டுக் கொண்டார். ஆனால் அந்தப் புத்தகப் பார்ஸல் பிரிக்கப்படாமல், 'பெறுநர் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை' என்ற குறிப்போடு திரும்பி வந்தது. எனவே நூலின் அருமை தெரியாத இதுபோன்ற அகம்பாவம் கொண்ட மக்களை அணுக வேண்டாம் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீர் அப்பாஸ் அலீக்கு மீண்டும் கடிதம் எழுதினார்கள்.

அதிலிருந்து இறைவனுடைய வேலைகள் உலகியல் வழிமுறைகளால் கறைபட்டுப் போய்விடக் கூடாது என்பதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்துக் கொண்ட அக்கறை புலனாகின்றது. அவர்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையின் உண்மைக்கும், முழுமைக்கும் ஓர் அளவுகோலாகவும் அமைந்துள்ளது.

இந்த நூல் தொடர்பான இன்னும் ஒரு முக்கியமான சம்பவத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நவாப் சித்தீக் ஹஸன் கான் என்பவர் ஆரம்பத்தில் கன்னோஜ் பிரிவைச் சேர்ந்த ஒரு மவ்லவி ஆக இருந்தார். பின்னர் அவர் போபால் அரச குமாரியைத் திருமணம் செய்ததன் மூலம் நவாப் ஆனார். அவர் ஒரு கற்றறிந்த மனிதராக இருந்த காரணத்தினால் இந்நூலை வாங்கிக் கொள்வதாக வாக்குறுதி அளித்திருந்தார். அந்நூல் வெளியானபோது அதன் முதல் மூன்று பாகங்கள் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்நூலில் அன்றைய ஆட்சியாளர்களின் மார்க்கமான கிறித்தவ மார்க்கத்தின் கொள்கைகள் மறுத்துரைக்கப்பட்டிருந்த காரணத்தால், தாம் அந்நூலை வாங்கியது வெளியே தெரிந்தால் ஆட்சியாளர்களின் கோபத்திற்கு ஆளாகக்கூடும் என்ற அச்சத்தால் அதனைத் திருப்பி அனுப்பி விட்டார். அவர் நூல்கள் அடங்கிய புத்தகக் கட்டைப் பிரித்திருக்கிறார்; படித்திருக்கிறார். ஆனால் மீண்டும் கட்டும்பொழுது மிகவும் கவனக்குறைவாக கட்டி அனுப்பி இருக்கிறார். அதன் காரணமாக நூலின் பல பக்கங்கள் கிழிந்து போயிருந்தன. அந்நூல் அடங்கிய புத்தகக் கட்டு திரும்பி வந்த பொழுது தாமும் அவ்விடத்தில் இருந்ததாக ஹாஃபிஸ் ஹாமிது அலீ சாஹிப் கூறுகிறார். நூல்கள் கிழிந்து போயிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முகம் சிவந்து போயிற்று. 'சரி உங்கள் ஆட்சியாளர்களைத் திருப்திப் –படுத்துங்கள்' என்று கூறினார்கள்.

சில மாதங்கள் கழிந்த பின்னர் நவாப் சித்தீக் ஹஸன் கான், ஆட்சியாளர்களின் அதிருப்திக்கு ஆளானார். அவருடைய நவாப் பட்டம் பறிக்கப்பட்டது. இது அவருக்குப் பேரிடியாக அமைந்தது. சித்தீக் ஹஸன் கானின் நிலைமை மிகவும்

பரிதாபத்திற்குரியதானது. அவருக்காக துஆச் செய்யும்படி மவ்லவி முஹம்மது ஹுஸைனும், ஹாஃபிஸ் முஹம்மது யூசுஃபும் கேட்டுக் கொண்டனர். ஆட்சியாளர்களின் கோபத்திற்கு ஆளாகி விடக் கூடாது என்பதற்காகத் தமது வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறியதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவர் மீது கோபம் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே! அற்ப காரணங்களுக்காக நம்பிக்கையை இழப்பது ஒரு பாவமான காரியமாகும். ஆனாலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பழிவாங்கும் எண்ணம் இருந்ததில்லை. எனவே அவர்கள் நவாபின் மீது இரக்கம் கொண்டு அவருக்காக துஆச் செய்தார்கள். அதனால் நவாப் மேலும் அவமானம் அடைவதிலிருந்தும், தண்டனை பெறுவதிலிருந்தும் காப்பாற்றப்பட்டார். அரசாங்கம் அவருக்கு நவாப் பட்டத்தை மீண்டும் வழங்கியது. ஆனாலும் அவர் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சிறிது காலத்திற்குப் பின் அவர் மரணம் அடைந்தார்.

பராஹீனே அஹ்மதிய்யா என்னும் மிகச் சிறந்த அந்த நூலின் சில சிறப்பம்சங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். அந்நூலின் இரண்டாம் பாகத்தில் ஆரிய சமாஜக் கொள்கையில் காணப்படும் தவறான நம்பிக்கைகள், இறைவெளிப்பாட்டின் தேவை, மற்ற வேதங்களை விடத் திருக்குர்ஆனுக்குள்ள சிறப்புத் தன்மைகள் ஆகியவற்றைப் பற்றி விவரித்துக் கூறப்பட்டுள்ளது. ஒரு மார்க்கத்தின் கருத்துகளுக்கு ஆதாரமாக அந்த மார்க்கத்தின் வேதங்களிலிருந்தே சான்றுகள் எடுத்து வைக்கப்பட வேண்டும் என்ற கொள்கை உறுதியாகப் பின்பற்றப்பட்டிருந்தது. பிற மார்க்கங்களின் தலைவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் அம்மார்க்கங்களைப் பின்பற்றுவோரது உணர்வுகள் காயப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையும் பின்பற்றப்பட்டிருந்தது. ஆனால் பொதுவாக ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களாலும், கிறித்தவப் பிரசாரகர்களாலும் இந்தக் கொள்கை பின்பற்றப்படவில்லை!

அதன் மூன்றாம் பாகத்தில் திருக்குர்ஆனின் சிறப்புகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனின் முழுமையான வழிகாட்டுதலுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதும் இறைவனால் அருளப்பட்டதுமான நூல் திருக்குர்ஆனே ஆகும் என்று நிரூபிக்கப்பட்டிருந்தது. திருக்குர்ஆனுக்கு எதிராக அடிக்கடி எழுப்பப்படும் பல ஆட்சேபணைகளுக்கு அதில் பதில் தரப்பட்டிருந்தது. தாமே இறையறிவிப்புகளைப் பெற்று வருவதாகவும், அதன் உண்மையை நிரூபிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்நூலில் குறிப்பிடுகின்றார்கள். இறைவன் தன்னுடைய கட்டளைகளை வெளிப்படுத்த மேற்கொள்ளும் பல்வேறு வழிமுறைகளைப் பற்றி ஆதாரப்பூர்வமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

இந்நூலின் நான்காவது பாகத்தில், மொழிகளின் தோற்றம், இறை அற்புதங்களின் தன்மை, அவற்றின் தேவை, எதிர்காலம் பற்றி இறைதூதர்கள் வழங்கும் முன்னறிவிப்புகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். அதன் பின் பௌத்த மதம், கிறித்தவம், ஆரிய சமாஜம் ஆகிய மார்க்கங்களின் கடவுட் கொள்கைகளை எடுத்துரைத்து, அவற்றிலிருந்து இஸ்லாம் எவ்வாறு சிறந்து விளங்குகின்றது என்று எடுத்துக் காட்டுகின்றார்கள். பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளும் விரிவாக அலசப்பட்டுள்ளன. யூதக் கொள்கைகள் திருக்குர்ஆனின் போதனைகளோடு ஒப்பு நோக்கப்பட்டுள்ளன. சுருக்கமாக அனைத்து மார்க்கங்களை விடவும் எல்லா விதத்திலும் இஸ்லாத்திற்குரிய மேன்மை அழகிய வாதங்களின் மூலம் சிறப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மிகப்பெரும் எதிரியாக விளங்கிய பட்டாலாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் இந்நூல் வெளிவந்தவுடன், இந்நூலைப் பற்றி விரிவான ஒரு மதிப்புரை எழுதினார். அது அவர் நடத்தி வந்த 'இஷாஅத்துஸ் ஸுன்னா' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. இந்நூலைப் பற்றி சரியான ஒரு மதிப்பீடாக அமையும் அதன் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்:

"தற்காலப் பார்வையில் இந்த நூல் தனித்து விளங்குகிறது என்பது எமது கருத்தாகும். கடந்த காலத்தில் இதுபோன்ற ஒரு நூல் வெளிவந்ததில்லை. எதிர்காலத்தைப் பற்றி எம்மால் எதுவும் கூற முடியாது. அதுபற்றி இறைவன் மட்டுமே நன்கறிவான். தம் உடலாலும், ஆற்றலாலும், பேனாவாலும், நாவாலும், இன்னும் எத்தனை வகையான செயல்பாடுகள் உள்ளனவோ அவை அனைத்தாலும் இஸ்லாத்திற்காகத் தொண்டாற்றுவதில் அந்நூலாசிரியருக்குள்ள விடா முயற்சி முஸ்லிம்களிடம் இதுவரை காணப்படாத ஒன்றாகும். இதனை ஆசியப்பகுதி மக்களிடம் பொதுவாகக் காணப்படும் மிகைப்படுத்திக் கூறும் பண்பின் வெளிப்பாடாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதுபோன்ற ஒரு நூல் இருந்தால் கொண்டு வந்து காட்டும்படி நாம் சவால் விடுகிறோம்."

(தொடரும்....)

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மிகப்பெரும் எதிரியாக விளங்கிய பட்டாலாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் **'பராஹீனே அஹ்மதிய்யா'** என்ற நூல் வெளிவந்தவுடன், இந்நூலைப் பற்றி, அவர் நடத்தி வந்த 'இஷாஅத்துஸ் ஸுன்னா' என்ற பத்திரிகையில் இவ்வாறு எழுதுகிறார்:

"தற்காலப் பார்வையில் இந்த நூல் தனித்து விளங்குகிறது என்பது எமது கருத்தாகும். கடந்த காலத்தில் இதுபோன்ற ஒரு நூல் வெளிவந்ததில்லை. எதிர்காலத்தைப் பற்றி எம்மால் எதுவும் கூற முடியாது. அதுபற்றி இறைவன் மட்டுமே நன்கறிவான். தம் உடலாலும், ஆற்றலாலும், பேனாவாலும், நாவாலும், இன்னும் எத்தனை வகையான செயல்பாடுகள் உள்ளனவோ அவை அனைத்தாலும் இஸ்லாத்திற்காகத் தொண்டாற்றுவதில் அந்நூலாசிரியருக்கு உள்ள விடா முயற்சி முஸ்லிம்களிடம் இதுவரை காணப்படாத ஒன்றாகும்....... இதுபோன்ற ஒரு நூல் இருந்தால் கொண்டு வந்து காட்டும்படி நாம் சவால் விடுக்கிறோம்."

2017-ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு

# உலக சமுதாயங்களால் வாக்களிக்கப்பட்டவர்

தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப்

தமிழாக்கம்: இப்னு வஸீம்

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

செவியேற்றுக் கொண்டிருப்போரே!

இன்று அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது சூரியன் மறைவதில்லை. ஜமாஅத் உலகின் 210 நாடுகளில் பரவிவிட்டது. மேலும் அஹ்மதிய்யத்தின் இளைஞர்கள் முழுவுலகிலும் நேசத்தின் கொடியை ஏந்தியவாறு இவ்வாறு பாடிக் கொண்டிருக்கிறார்கள்:

என்ன நடந்தாலும் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தைப் பரப்பியே தீருவோம்.

எங்கு நமக்கு செல்ல வேண்டி வந்தாலும் சரி நாம் சென்றே தீருவோம்.

மஹ்மூதே! நாம் உண்மையை வெளிபடுத்தி விட்டே ஓய்வோம்.

இதற்காக நாம் அகிலத்தையே அசைக்க நேர்ந்தாலும் சரியே!

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் பலதரப்பட்ட சமயங்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப எந்த மகத்துவமிக்கப் பணிகளை மேற்கொண்டார்களோ; அவற்றில் மிகப் பெரிய பணியாக இருந்தது என்னவென்றால், அன்னார் (அலை) படைப்பினங்களை இறைவனோடு இணைத்தார்கள். உலகிலிருந்து மார்க்கப் போர்களை நிறுத்தி முழுவுலகையும் ஒரே பாதையில் ஒன்றிணைத்து விட்டார்கள். பொது மக்களின் உள்ளத்தில் மத போதகர்களின் கண்ணியத்தை நிலைநாட்டினார்கள். ஜமாஅத் மக்களின் உள்ளங்களில் தேசத்தின் மீது நேசத்தை ஏற்படுத்தினார்கள்.

அன்னார் உலக சமயங்களின் அறிஞர்களுக்கு அன்பு, நேசம் மற்றும் ஒருமைபாடு ஆகியவற்றைப் போதித்தவாறு கூறுகிறார்கள்:

நான் மிகப் பணிவுடனும் தாழ்மையுடனும் முஸ்லிம் அறிஞர்களுக்கும் கிருத்துவ அறிஞர்களுக்கும் ஹிந்து மற்றும் ஆரிய பண்டிதர்களுக்கும் இந்தப் பிரசுரத்தை அனுப்பித் தெரிவிக்கிறேன்: நான் ஒழுக்கரீதியிலும் கொள்கை ரீதியிலும் மற்றும் ஈமானின் ரீதியிலும் உள்ள பலவீனங்களையும் தவறுகளையும் சீர்திருத்துவதற்காக உலகில் அனுப்பப் -பட்டுள்ளேன்.

எனது பாதங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பாதங்களோடு ஒத்துள்ளன. இதே பொருளில் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என அழைக்கப்படுகிறேன். ஏனெனில் எனக்கு, வழக்கத்திற்கு மாற்றமான அடையாளங்கள் மூலமாகவும் தூய போதனையின் மூலமாகவும் உண்மையை உலகில் பரப்புமாறுக் கட்டளையிடப்பட்டுள்ளது.

மார்க்கத்திற்காக வாள் ஏந்துவதையும் மார்க்கத்திற்காக இறைவனின் அடியார்கள் கொல்லப்படுவதையும் நான் வன்மையாக எதிர்க்கிறேன். என்னால் இயன்ற அளவு இந்த அனைத்துத் தவறுகளையும் முஸ்லிம்களிலிருந்து அகற்றுமாறும்; நல்லொழுக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, நீதி மற்றும் உண்மையின் வழிகளின் பால் அவர்களை அழைக்குமாறும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். நான் அனைத்து முஸ்லிம்கள், கிருத்தவர்கள், ஹிந்துக்கள் மற்றும் ஆரியர்களுக்கு இவ்விஷயத்தை வெளிப்படுத்தி விடுகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவரில்லை.



நான் மனித குலத்தின் மீது, அன்பு கொண்ட தாய் தன் குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதைப் போல் இன்னும் சொல்வதாயின், அதை விட அதிகம் அன்பு செலுத்துகிறேன். நான், எவற்றால் உண்மைக் கொல்லப்படுகிறதோ அந்தப் பொய்யான கொள்கைக்கு மட்டுமே எதிரியாவேன். மனிதர்கள் மீது அனுதாபம் கொள்வது என் கடமையாகும். பொய், இணைவைத்தல், கொடுமையிழைத்தல், ஒவ்வொரு தீயச்செயல், நீதியின்மை மற்றும் தீயவொழுக்கங்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருத்தல் என் கொள்கையாகும். (அர்பயீன் எண் 1 பக்கம் 1)

அன்பிற்குரியோரே! அன்னார் 1889-இல் நமது இதே பஞ்சாப் மாகாணத்திலுள்ள லூதியானா நகரத்தில் ஒரு ஜமாஅத்திற்கு அடித்தளமிட்டார்கள். முதல் நாளில் 40 மனத்தூய்மைமிக்க நன்மனிதர்கள் அவர்கள் கையில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். இந்தக் குழு படிப்படியாக காதியானின் இந்த அருளுக்குரிய மண்ணிலிருந்து புறப்பட்டு உலகம் முழுவதும் பரவிவிட்டது. இந்த 40 நபித்தோழர்களின் குழு ஏற்றமடைந்தவாறு நூறுகளிலிருந்து ஆயிரங்கள், ஆயிரங்களில் இருந்து லட்சங்கள் மற்றும் லட்சங்களிலிருந்து கோடிகளை எட்டிவிட்டது.

இன்று அல்லாஹ்வின் அருளினால் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளுக்கேற்ப முழுவுலகிலும் படைப்பினங்களை இறைவனோடு இணைக்கப்படுகிற அதே வேளையில், மனிதனை மனிதனோடு இணைக்கின்ற அருளுக்குரிய பணியும் நடைபெறுகிறது. ஜமாஅத் தனது முழக்கமான எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் வெறுப்பில்லை என்பதன் கீழ் உலகம் முழுவதும் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. ஜமாஅத் மற்றும் குறிப்பாக ஜமாஅத்தின் தற்போதைய தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் முழுவுலகிலும் அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியை வழங்குகிறார்கள்.

இவ்வழியில் ஜமாஅத்துக்கு எண்ணற்ற எதிர்ப்புகளை எதிர்நோக்க நேரிடுகிறது. ஜமாஅத்தின் எதிரிகள், இன்றிலிருந்து அல்ல; ஏறத்தாழ 125 ஆண்டுகளாக எப்படியாவது இந்த ஜமாஅத்தை அழித்து விடவேண்டும் என்ற இந்த முயற்சிகளிலேயே ஈடுபட்டுள்ளனர். ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை நியமித்த அந்த இறைவன் எந்நேரமும் அன்னாருக்கு ஆதரவாக ஆயத்தமாகவுள்ளான்.


அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநருக்கு இறைவன் அக்காலத்திலேயே எண்ணற்ற நற்செய்திகளை வழங்கினான். அவற்றிலிருந்து நான் ஒரு சில மேற்கோள்களை ஹுஸூர் (அலை) அவர்களின் சொற்களிலேயே உங்கள் முன் எடுத்துரைக்கிறேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவன் என்னை முன்னிலைப்படுத்திக் கூறினான். நான் எனது அதிசயத்தைக் காட்டுவேன். எனது வல்லமையின் வெளிப்பாட்டால் உம்மை உயர்த்துவேன். உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார்; உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை; ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான் மற்றும் பெரும் சக்திவாய்ந்த தாக்குதல்களால் அவரது உண்மையை வெளிப்படுத்தி விடுவான். நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்.

மேலும் கூறினார்கள்: நான் உமக்கு பரகத்திற்கு மேல் பரக்கத்தை வழங்குவேன். எதுவரையென்றால், பேரரசர்கள் உம் ஆடையிலிருந்து பரக்கத்தைத் தேடுவார்கள்.

இந்த நற்செய்திகளின் ஒளியிலேயே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் நமக்கு இந்த மகத்துவமிக்க செய்தியை வழங்கியுள்ளார்கள்:

நான் ஒரு மகத்துவமிக்க வெற்றியைப் பெறுவது அண்மையிலுள்ளது. ஏனெனில், என் நாவுக்கு ஆதரவாக இன்னொரு நா பேசுகிறது. என் கைகளுக்கு வலுவூட்ட இன்னொரு கை செயல் படுகிறது. அதை உலகம் பார்ப்பதில்லை; ஆனால் நான் பார்க்கிறேன். என்னுள் ஒரு வானத்து ஆன்மா பேசுகிறது. அது



எனது ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு எழுத்துக்கும் உயிரூட்டுகிறது. வானத்தில் ஓர் உத்வேகமும் எழுச்சியும் உருவாகியுள்ளது. அதுவொரு சிலையைப் போல் இந்த உள்ளங்கை மண்ணை (எளியவனை) எழுப்பிவிட்டது.

எவருக்குத் தவ்பாவின் வாயில்கள் அடைக்கப்பட வில்லையோ; அவர் நான் என் தரப்பிலிருந்து இல்லை என்பதை அண்மையில் கண்டுக் கொள்வார். உண்மையாளரை அடையாளம் காணமுடியாத அந்தக் கண்கள் பார்வைத்திறன் உள்ளவையா? எவருக்கு அந்த வானத்து அழைப்பின் உணர்வு இல்லையோ அவரும் உயிருள்ளவரா? (இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின், தொகுதி 3, பக்கம் 403)

வானத்து ஓசையைக் கேட்கும்; இறைவன் புறமிருந்து வந்த வழிகாட்டியை ஏற்கும் அந்த நபர் நற்பாக்கியம் பெற்றவராவார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் எதிரிகளை நோக்கிக் கூறுகிறார்கள்:

உலகம் என்னை அடையாளம் கண்டுகொள்வதில்லை. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை அறிவான். எனது அழிவை விரும்புவது அம்மக்களின் தவறு மற்றும் முழுக்க முழுக்க துர்பாக்கியமாகும். நான் உண்மை எஜமானனின் கைகளால் நடப்பட்ட மரமாவேன்......

மக்களே! நீங்கள் உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள்! என்னுடன் இருக்கும் கரம் இறுதித் தருணம் வரை என்னோடு நேசத்துடன் நடந்து கொள்ளும். உங்களின் பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள், சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து நான் அழிவதற்கு துஆ செய்யுங்கள். அப்பொழுது கூட இறைவன் ஒருபோதும் உங்கள் துஆக்களைக் ஏற்க மாட்டான். தன் பணியை நிறைவு செய்யாத வரை நிறுத்த மாட்டான்...... எனவே நீங்கள் உங்கள் மீதே அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள்......



இறைவனோடு சண்டையிடாதீர்கள்! என்னை அழிப்பது உங்களுக்கு சாத்தியமில்லை. (ஸமீமா தொஹ்ஃபா கோலட்வியா பக்கம் 50)

பிறகு கூறினார்கள்: அறிவீனர்களே! குருடர்களே! எனக்கு முன்னர் எந்த உண்மையாளர் தான் வீண் போயிருக்கிறார், நான் வீண் போவதற்கு? எந்த உண்மையான விசுவாசியைத் தான் இறைவன் இழிவுபடுத்தி அழித்துள்ளான், என்னை அழிப்பதற்கு? உறுதியாக நினைவிற் கொள்ளுங்கள்! காதுகளைத் திறந்து கேளுங்கள்! எனது ஆன்மா அழியக் கூடிய ஆன்மாயில்லை. தோல்வி என்பது என் அகராதியிலேயே இல்லை. எனக்கு எப்படிப்பட்ட தைரியமும் உண்மையும் வழங்கப்பட்டுள்ளது என்றால், அதற்கு முன் மலை கூட அற்பமாகும்.

நான் யாரைப் பற்றியும் கவலைக் கொள்வதில்லை. நான் தனித்திருந்தேன். அவ்வாறு தனித்திருப்பதை நான் வெறுக்கவில்லை. இறைவன் என்னை விட்டுவிடுவானா? இல்லை ஒருபோதும் விடமாட்டான். அவன் என்னை வீணாக்கிவிடுவானா? இல்லை ஒருபோதும் வீணாக்கமாட்டான். பகைவர்கள் இழிவடைவர். பொறாமை கொள்பவர் வெட்கப்படுவர். இறைவன் தன் அடியானுக்கு ஒவ்வொரு களத்திலும் வெற்றியை வழங்குவான்.

ஹுஸூர் (அலை) கூறுகிறார்கள்: குறைமதியுடையோரே! இது மனிதனின் செயலாக இருந்திருந்தால் அப்படிப்பட்ட பொய்யனுக்கு (தண்டனை அளிக்க) அந்த இறைவனே போதுமானவனாக இருந்திருப்பான்! உங்களின் மற்றும் உங்கள் சூழ்ச்சியின் எந்தத் தேவையுமிருக்கவில்லை. அந்த உலகத்தின் அரசன், தானே என்னை இல்லாமற் செய்திருப்பான்!

கண்ணியத்திற்குரியோரே!

நான் எனது சொற்பொழிவை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யஹுல்லாஹ்...) அவர்களின் சொற்களுடன் நிறைவு செய்கிறேன். அதில் ஹுஸூர் அவர்கள் ஜமாஅத்துக்கு நற்செய்தி வழங்கியவாறு அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

ஹுஸூர் கூறுகிறார்கள்: இச்சமயம் ஐரோப்பா, அமேரிக்கா, ஆப்பிரிக்கா, எதுவரை என்றால் அரபு நாடுகளிலும் கூட இறைவன் உள்ளங்களைத் திருப்பக் காற்றை வீசச் செய்துள்ளான். இந்த இறைவனே உண்மை வாக்குறுதிகளை வழங்கும் இறைவன் ஆவான். இன்று நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளைப் பூர்த்தியாகக் காண்கிறோம்.

நமது ஈமான் அதிகரிக்கிறது. ஜமாஅத்தின் எதிரிகளின் உள்ளங்களில் பீதி ஏற்பட்டுள்ளது. எதிரி எதிர்ப்பின் மூலம் ஜமாஅத்தை அழிப்பதற்கு முயற்சி செய்கிறான். ஆனால், அதே அளவு இறைவன் ஜமாஅத்துக்கு முன்னேற்றத்தையும் வெற்றியையும் வழங்குகிறான்.

ஹுஸூர் கூறுகிறார்கள்: எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டாலும் சரி; எத்தனை சொத்துக்கள் அபகரிக்கப்பட்டாலும் சரி; எத்தனை பேர் ஷஹீதானாலும் சரி. இறுதியில் நமக்கே வெற்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.... நான் எதிரிகளுக்கும் கூறுகிறேன்: அவர்கள் எதிர்ப்பிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். நாம், சக்திவாய்ந்தவர்களில் எல்லாம் சிறந்த சக்திவாய்ந்தவனாக இருக்கும் அந்த இறைவனின் மடியில் உள்ளோம். அவனே நமது எஜமானன். அவனே உதவியாளன். இவர்கள் தம் அநீதிகளில் இருந்து தவிர்ந்து கொள்ளவில்லை என்றால், தமது முடிவைக் காண்பர். இறைவன் நமது சிறுபான்மையை பெரும்பான்மையாக மாற்றி விடுவான். இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் அழகிய போதனையை உலகில் பரப்பும் பொறுப்பை இறைவன் நம் மீது சுமத்தியுள்ளான். (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மே 27, 2004 அன்று ஆற்றிய சொற்பொழிவு)

> அறீவீனர்களே! குருடர்களே! எனக்கு முன்னர் எந்த உண்மையாளர் தான் வீண் போயிருக்கிறார் – நான் வீண் போவதற்கு? எந்த உண்மையான விசுசாசியைத்தான் இறைவன் இழிவுபடுத்தி அளித்துள்ளான் – என்னை அழிப்பதற்கு? உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். காதுகளைத் திறந்து கேளுங்கள். எனது ஆன்மா அழியக்கூடிய ஆன்மா இல்லை. தோல்வி என்பது என் அகராதியிலேயே இல்லை. எனக்கு எப்படிப்பட்ட தைரியமும் உண்மையும் வழங்கப்பட்டுள்ளது என்றால், அதற்கு முன் மலை கூட அற்பமாகும்.

# ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10.12.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

## முஹர்ரம் மாதமும் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயர் தகுதியும்

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் முன்னர் நடைபெற்ற விஷயங்கள் மீண்டும் நடைபெறாது என்பதனை விவரித்துள்ளார்கள். சொர்க்கத்திலிருந்து முதல் ஆதம் வெளியேற்றப்பட்டார். ஆதமின் பிள்ளைகள் சொர்க்கத்தில் நுழைவதற்கு ஒரு புதிய வடிவில் ஏற்பாடு நடைபெறுவதற்காக அல்லாஹ் ஆதம் என்ற பெயரை எனக்கு வைத்துள்ளான் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்து கூறினார்கள்: முதல் மஸீஹை யூதர்கள் சிலுவையில் அறைந்தனர். அல்லாஹ் எனக்கு மஸீஹ் என பெயர் வைத்து சிலுவையை முறிப்பதற்குரிய ஏற்பாட்டை செய்துள்ளான்.




ஆக, அல்லாஹ் முதல் முறை ஏற்பட்ட தோல்வியை இரண்டாவது முறை வெற்றியாக மாற்றுவான். முதலில், ஹுஸைனை யஸீத் ஷஹீதாக்கினான் என்றால், இரண்டாவது ஹுஸைனின் மூலமாக யஸீதின் படைக்குத் தோல்வியை வழங்குவான் இன்ஷா அல்லாஹ். நாம் இந்த ஈமானில் தான் நிலைநிற்கின்றோம். முஹர்ரம் மாதம் நமக்கு வழங்குகின்ற பாடம் என்னவென்றால், நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சந்ததியின் மீது எப்போதும் ஸலவாத் ஓதிக் கொண்டேயிருக்க வேண்டும். **காலத்தின் இமாமின் நோக்கங்கள் நிறைவேற ஸலவாத், துஆ மற்றும் தமது நிலைமைகளில் தூய மாற்றத்தினை ஏற்படுத்தி நமது பங்கினை வழங்க முயற்சி செய்து வர வேண்டும்.** மேலும் இந்த யஸீத் பண்பு கொண்ட மக்கள் முன்பு உறுதிப்பாட்டினை வெளிப்படுத்திய வாறு எப்பொழுதும் நிலை நில்லுங்கள். நிச்சயமாக இந்த முறை யஸீத் வெற்றி பெறமாட்டான். மாறாக, ஹுஸைனீக்களே வெற்றி பெறுவர். உறுதிப்பாட்டிற்கான பாக்கியம் கூட அல்லாஹ்வின் உதவியில்தான் கிடைக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்கு அல்லாஹ் துஆ மற்றும் பொறுமையை மேற்கொள்ளும்படி கூறியுள்ளான். அநீதியை சகித்துக் கொள்வது மாத்திரம் பொறுமையல்ல. நடந்து முடிந்து விட்டதன் மீது அமைதியாக அமர்ந்திருப்பதும் பொறுமையல்ல. மாறாக நிலையான மனப் பான்மையுடன் நல்ல பணிகளைத் தொடர்வது மற்றும் எந்த அபாயத்தையும் அச்சத்தையும் பொருட்படுத்தாமல் உண்மையை வெளிப்படுத்திக் கொண்டே செல்வதும் தான் பொறுமையாகும். ஆக, உண்மையை வெளிப்படுத்த ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நம்முன் நிலைநிறுத்தியிருக்கின்ற முன்மாதிரிகளை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் அதில் நிலைநின்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட வெற்றியின் பங்குதாரர்களாக நாம் திகழ்வோம் இன்ஷா அல்லாஹ். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு ஸலவாத் ஓதுவதும் மிக முக்கியமான விஷயமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். ஹதீஸ்களிலும் அதிக

அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் விட அல்லாஹ் திருக்குர்ஆனிலும் ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். எனவே பொதுவாக நாம் ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும். மேலும் இம்மாதத்தில் குறிப்பாக நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறு இதற்கு முன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்களோ அதனை நான் மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இம்மாதத்தில் கண்டிப்பாக அதிக அளவில் ஸலவாத் ஓதுங்கள். கர்பலா சம்பவத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தவும் அநீதிகளுக்கு முடிவுகட்டவும் அல்லாஹ்வின் உதவியைப் பெறவும் இது மிகச் சிறந்த வழிமுறையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஓதப்பட்ட ஸலவாத் அன்னாரின் ஆத்மீக, பௌதீக சந்ததிகளின் மன அமைதிக்கு காரணமாகவும் அமைகின்றது. முன்னேற்றங்களின் காட்சிகளும் நமக்குத் தென்படுகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பர்களின்மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்த இது சிறந்த வழிமுறையுமாகும். மேலும் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் நோக்கங்களை முழுமைபெறச் செய்வதிலும் இந்த ஸலவாத் எண்ணற்ற பரக்கத்துகளை பெற்றுத் தரும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு இந்நாட்களில் அதிகமதிகம் ஸலவாத் ஓதும் பாக்கியத்தைத் தந்தருள்வானாக! மேலும் இந்த ஸலவாத் நம்முடைய பரக்கத்திற்கும் காரணமாக அமையும்.

இறுதியாக நான் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் உயரிய அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றினைப் படிக்கிறேன். அதனை ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் உயர் அந்தஸ்து தொடர்பாக ஓர் அஹ்மதி தவறாகப் பேசியதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்குத் தகவல் தரப்பட்டது.

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:

ஹுஸைன் (ரலி) அவர்கள், காலத்தின் கலீஃபா அதாவது தீய யஸீதிடம் பைஅத் செய்யாத காரணத்தினால் நவூதுபில்லாஹ் கிளர்ச்சியாளர் ஆவார். மேலும் யஸீது உண்மையாளன் ஆவான் என்றும் என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்த சிலர் அறிவீனமாக இதுபோன்ற பேச்சுக்களைப் பேசியதாக எனக்குத் தகவல் கிடைத்தது. லஃனத்துல்லாஹி அலல் காஸிபீன் – பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக. என்னுடைய ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு இறையச்சமுடையவரின் வாயிலிருந்து இதுபோன்ற தீய சொற்கள் வெளி வந்திருக்குமென நான் நம்பவில்லை.

எவ்வாறிருப்பினும், யஸீது ஒரு கெட்ட இயல்பு கொண்ட உலகத்தின் புழு மற்றும் கொடுமைக்காரன் ஆவான். மேலும் எவ்விஷயங்களினால் ஒருவர் நம்பிக்கையாளர் என அழைக்கப்





படுவாரோ அவ்விஷயங்கள் அவனிடத்தில் இருக்கவில்லை. நம்பிக்கையாளராக ஆவது சாதாரண விஷயமல்ல. அல்லாஹ் அப்படிப்பட்டவர்களைப் பற்றி கூறுகின்றான்.

எவர்களுடைய செயல்கள் அவர்களின் நம்பிக்கைக்கு சாட்சி பகர்கின்றனவோ அவர்களே நம்பிக்கையாளர்கள் ஆவர். அவர்களின் உள்ளங்களில் ஈமான் எழுதப்படுகின்றது. மேலும் அவர்கள் எல்லாவற்றையும் விட தமது இறைவன் மற்றும் அவனது திருப்திக்கே முதன்மைவழங்குகின்றனர். மேலும் இறையச்சத்தின் நுட்பமான வழிகளை அவர்கள் இறைவனுக்காக மேற்கொள்கின்றனர். மேலும் அவனது அன்பில் மாய்ந்து விடுகின்றனர். சிலையைப் போன்று இறைவனிடமிருந்து விலக்குகின்ற எல்லா விஷயங்களில் இருந்தும் அது ஒழுக்கநிலைகளாக இருந்தாலும் சரி அல்லது தீய செயல்களாக இருந்தாலும் சரி அல்லது கவனக்குறைவு மற்றும் சோம்பலாக இருந்தாலும் சரி எல்லாவற்றிலிருந்தும் தங்களைத் தொலைவில் விலக்கிக் கொள்கின்றனர்.

ஆனால் இவ்விஷயங்கள் துர்பாக்கியசாலியான யஸீதிற்கு எங்கு கிடைக்கப் பெற்றது. உலக நேசம் அவனை குருடனாக்கியிருந்தது. ஆனால் ஹுஸைன் (ரலி) அவர்கள்

*(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்...)*

# ஒரு கிளியின் கதை



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனை சந்திக்க விரும்பும் ஒவ்வொருவரும் மரணத்தின் வாசலைக் கடந்து செல்வது அவசியமானதாகும் என்பது நல்லடியார்களின் கூற்றாகும்.

இக்கருத்தைக் குறித்த ஒரு கதை மஸ்னவியில் இடம் பெற்றுள்ளது. ஒரு மனிதனிடம் ஒரு கிளி இருந்தது. அவன் ஒருநாள் பயணம் செய்யப் புறப்பட்டான். அப்போது அந்தக் கிளியிடம், நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா என்று கேட்டான். கிளி கூறியது: குறிப்பிட்ட இந்த இடத்தை நீர் கடந்து செல்ல நேர்ந்தால் அங்கு ஒரு பெரிய மரத்தைக் காண்பீர். அதில் பல கிளிகள் இருக்கும். நீர் அவற்றிடம் என்னுடைய இந்த தூதுச் செய்தியைக் கூறிவீடும். அதாவது, அவை மிகவும் நற்பேறு பெற்றவை. திறந்தவெளியில் சுதந்திர வாழ்க்கை வாழ்கின்றன. நானோ ஒரு துர்பாக்கியசாலி. இங்கு சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றேன்.”

அந்த மனிதன் குறிப்பிட்ட அந்த மரத்தை அடைந்ததும் இந்தத் தூதுச் செய்தியை கிளிகளிடம் தெரிவித்தான். அப்போது ஒரு கிளி மரத்திலிருந்து விழுந்து துடிதுடித்தவாறு மரணித்தது. அந்த மனிதன் கிளியின் மரணத்திற்குக் காரணமாகி விட்டோமே என்று எண்ணி மிகவும் வருந்தினான். எனினும் பொறுமையுடன் இருப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.



பயணம் முடித்து வீடு திரும்பியதும் இந்த முழு கதையையும் அவன் தனது கிளியிடம் கூறி, மரணித்துவிட்ட அந்தக் கிளிக்காகத் தனது துக்கத்தை வெளிப்படுத்தினான். இதைக் கேட்டதும் அவனது கிளி கூண்டுக்குள்ளேயே சரிந்து துடிதுடித்தவாறு இறந்து விட்டது. அந்த மனிதன் இப்போது இரண்டு மரணங்களுக்கு நாம் காரணமாகி விட்டோமே என்று எண்ணியவாறு மீண்டும் வருத்தப்பட்டான்.

அவன் இறந்துவிட்ட அந்தக் கிளியை கூண்டிலிருந்து எடுத்து வெளியே வீசினான். அப்போது இறந்துவிட்டதாகக் கருதப்பட்டு கூண்டிலிருந்து வெளியே எறியப்பட்ட அந்தக் கிளி பறந்து சென்று ஒரு சுவரின் மீது அமர்ந்தது. அது கூறியது, உண்மையில் அந்தக் கிளியும் மரணிக்கவில்லை. நானும் மரணிக்கவில்லை. என்னுடைய தூதுச் செய்தியில் சிறையிலிருந்து விடுதலை பெற ஒரு வழியினை கூறுமாறு அந்தக் கிளிகளிடம் கேட்டிருந்தேன். எனவே அந்தக் கிளி உண்மையான விடுதலை என்பது மரணத்தின் மூலமே கிடைக்கிறது என்பதைத் தனது செய்கையால் எனக்குக் காட்டியது. எனவே நான் மரணத்தை ஏற்றேன்; விடுதலை பெற்றேன்.

ஆகவே, தீமையைத் தூண்டும் ஆன்மாவின் பிடியில் சிக்கியுள்ள ஒருவர் தன் மீது மரணத்தின் நிலையை ஏற்படுத்தாத வரை இந்த சிறையிலிருந்து விடுதலை பெற முடியாது.


(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 96)

*(12 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மிகவும் தூயவராக இருந்தார்கள். இறைவன் தனது கரங்களினால் தூய்மைப்படுத்திய, தனது அன்பை வழங்கிய நல்லடியார்களைச் சார்ந்தவராக நிச்சயமாக அவர் இருந்தார். நிச்சயமாக அவர் சொர்க்கத்தின் தலைவர்களைச் சார்ந்தவராவார். மேலும் கடுகளவு அவர் மீது பகைமைகொள்வது ஈமானின் அழிவிற்குக் காரணமாகும். மேலும் அந்த இமாமின் இறையச்சம், அன்பு, பொறுமை, உறுதிப்பாடு, தூய்மை, இறைவணக்கம் நமக்கு அழகிய முன்மாதிரி ஆகும். நாம் அவருக்குக் கிடைக்கப் பெற்ற நேர்வழியைப் பின்பற்றுபவர்கள் ஆவோம். அவர் மீது பகைமைகொண்ட உள்ளம் அழிந்து விட்டது. செயல்ரீதியாக அவர் மீதான அன்பை வெளிப்படுத்துகின்ற உள்ளம் வெற்றி பெற்று விட்டது. எவ்வாறு ஒரு தூய கண்ணாடி ஒரு அழகிய மனிதனின் சித்திரத்தைத் தன்னுள் ஈர்த்துக் கொள்கின்றதோ அதேபோன்று அவரின் ஈமான், ஒழுக்கம், வீரம், உறுதிப்பாடு, இறைநேசம் என்ற எல்லா விஷயங்களையும் நிழலாக முழுமையாக பின்பற்றுவதுடன் எவர் அதனைத் தன்னுள் எடுத்துக் கொள்கின்றாரோ அவர் வெற்றி பெற்று விட்டார். இம்மக்கள் உலகத்தின் கண்களிலிருந்து மறைவானவர்கள் ஆவர். அவர்களின் மகத்துவத்தை அவர்களைச் சார்ந்தவர்களைத் தவிர வேறு எவர் அறிவார்! உலகத்தின் கண்கள் அவரை அடையாளம் காண முடியாது. ஏனென்றால் அவர் மக்களைப் பொருத்தவரை உலகிலிருந்து தொலைவில் உள்ளார். ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் இதனாலேயே நிகழ்ந்தது. ஏனென்றால் அவர் அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை. உலகம் எந்தத் தூய நல்லடியாரை அவரின் காலத்தில் அன்பு செலுத்தியது! அவ்வாறே ஹுஸைன் (ரலி) அவர்களிடமும் உலகம் நடந்து கொண்டது.

சுருக்கமாக, ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை ஏளனம் செய்வது மிகவும் கீழான, ஈமானற்ற செயலாகும். எந்த நபர் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்ளை அல்லது தூய தலைவர்களை ஏளனம் செய்கின்றாரோ அல்லது இழிவான சொற்களைத் தனது நாவினால் கூறுகின்றாரோ அவர் தனது ஈமானை வீணாக்கிக் கொள்கின்றார். ஏனென்றால் எவர் நல்லடியர்கள் மற்றும் அவனது அன்பிற்குரியவர்களின் எதிரியாக உள்ளாரோ கண்ணியமிக்க அல்லாஹ் அவரின் எதிரியாகி விடுகின்றான்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சந்ததிகளை நேசிக்கும் பாக்கியத்தை எப்பொழுதும் நமக்கு வழங்கிக் கொண்டேயிருப்பானாக! பாகிஸ்தான் மற்றும் மற்ற நாடுகளில் எங்கெல்லாம் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் அநீதிகள் நடைபெறுகின்றதோ அங்கு அதனை அல்லாஹ் அழிக்க துஆ செய்யுங்கள். இம்மாதத்தில் பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் குறிப்பாக ஷியாக்கள் மற்றும் சன்னிகளுக்கிடையே குழப்பம் ஏற்படுகின்றது. ஒருவர் மற்றவரை கொலை செய்கின்றனர். கூட்டங்கள் மீது தீவிரவாத தாக்குதல் நடைபெறுகின்றது. அல்லாஹ் இவற்றிலிருந்து பாதுகாப்பானாக! மேலும் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் எல்லா முஸ்லிம்களுக்கும் இம்மாதம் பாதுகாப்பான, நலமான மாதமாக கழியட்டுமாக! ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் உண்மையான நோக்கத்தை இம்மக்கள் புரிந்து கொள்ளட்டுமாக! மேலும் இக்காலத்தில் இமாமை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், உண்மைப்படுத்தக் கூடியவர்களுமாக இவர்கள் ஆகட்டுமாக! ஆமீன். (தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)



# ஆட்சேபனைக்குப் பதில்



மிர்ஸா சாஹிப் ஹஜ் செய்யவில்லை என்ற ஓர் ஆட்சேபனையைப் பொதுவாக அஹ்மதியல்லாத மக்கள் முன்வைக்கின்றனர். இந்த ஆட்சேபனை இன்று நேற்று வைக்கப்பட்டதல்ல. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் காலத்தில் அவர்களின் எதிரிகளால் முன்வைக்கப்பட்ட ஓர் ஆட்சபேனையாகும். இதற்கு அப்போதே அவர்கள் பல ரீதிகளில் பதில் கூறிவிட்டார்கள். அவற்றில் ஒரு பதிலை நாம் இங்கு பதிவு செய்கிறோம்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எதிரிகளாகிய இவர்கள் விஷமத்தனமாக இந்த ஆட்சேபனையை முன்வைக்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து ஆண்டுகள் மதீனாவில் வாழ்ந்தார்கள். மதீனாவிலிருந்து மக்கா இரண்டு நாட்கள் பயண தூரத்தில் தான் உள்ளது. ஆனால் அவர்கள் பத்து ஆண்டுகளில் ஒருமுறை கூட ஹஜ் செய்யவில்லை. அவர்கள் பயணத்திற்காக வாகனம் போன்றவற்றுக்கான ஏற்பாடு செய்திருக்க முடியும். தேவைக்கேற்ப செல்வம் இருப்பது மட்டும் ஹஜ் செய்வதற்கான நிபந்தனை கிடையாது. எவ்விதமான குழப்பங்களுக்கான அச்சமும் இருப்பது ஆகாது என்பதும் இதற்கான நிபந்தனையாகும். அங்கு வரை சென்று அமைதியுடன் ஹஜ் செய்வதற்கான எல்லா வசதிகளும் இருத்தல் வேண்டும். காட்டுமிராண்டிகளைப் போன்ற ஆலிம்கள் இங்கு நம்மை கொலை செய்வதற்கான ஃபத்வா கொடுத்துக் கொண்டிருக்கையில், அரசாங்கத்திற்கும் இவர்கள் அஞ்சுவதில்லை எனும்போது, அங்கு இவர்கள் என்னவெல்லாம் செய்ய மாட்டார்கள்! ஆனால் நாம் ஹஜ் செய்யவில்லை என்பதைக் குறித்து இவர்களுக்கு அப்படி என்ன அக்கறை? நாம் ஹஜ் செய்தால் இவர்கள் நம்மை முஸ்லிம் என்று ஏற்றுக் கொள்வார்களா? நமது ஜமாஅத்தில் இணைந்து விடுவார்களா? சரி! நாம் ஹஜ் செய்து வந்தால் இந்த ஆலிம்கள் அனைவரும் நமது கையில் தவ்பா செய்து நமது ஜமாஅத்தில் இணைந்து விடுவதாகவும் நமது சீடர்களாகி விடுவதாகவும் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் எழுதித் தரட்டும். இவ்வாறு சத்தியம் செய்து ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் நாம் ஹஜ்ஜுக்கு சென்று வருகிறோம். இனி வரும் காலங்களில் மவ்லவிகளின் குழப்பங்கள் நீங்குவதற்காக இறைவன் நமது வழிகளில் எளிதை ஏற்படுத்துவான். அநாவசியமாக விஷமத்தனத்துடன் ஆட்சேபனை செய்வது சரியல்ல. இவர்களின் இந்த ஆட்சேபனையானது நம் மீது சுமத்துவதையும் தாண்டி இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் விழுகின்றது. ஏனென்றால் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வாழ்வின் இறுதிப் பகுதியில்தான் ஹஜ் செய்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 248)



# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சி - அமைதி நிறைந்த செழித்தோங்கும் சமுதாயத்தை உருவாக்குவதில் இன்றைய தலைமைத்துவத்திற்கு ஒரு வழிகாட்டும் விளக்காகும்



*(மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப், அமீர் ஜமாஅத் - UK)*

**தமிழாக்கம்: K.A. தாரிக் அஹ்மது**

அமைதி நிறைந்த செழித்தோங்கும் சமுதாயத்தை ஏற்படுத்த இஸ்லாமிய ஆட்சி எப்படி ஒரு வழிகாட்டும் விளக்காக அமைய முடியும் என்பதை எடுத்துரைக்க இன்று எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய மார்க்கச் சட்டத்தில் ஜனநாயகம் குறித்து இன்று நிலவும் தறவான கருத்து –களைக் கருத்தில் கொள்ளும் போது இந்தத் தலைப்பு மிகவும் கடினமான ஒன்றாகும்.




ஷரீஅத் சட்டம் அல்லது இஸ்லாமிய விதிமுறைகள் பற்றி உலகம் நினைக்கும் போது, அவர்களுக்கு தாலிபான்கள் அல்லது ISIS –ன் பிம்பங்கள் காட்டப்படுவது துரதிஷ்டவசமானதாகும். ஆனால், மன்னர்களுக்கெல்லாம் மன்னரான தூய மாநபி முஹம்மது (ஸல்) அவர்களே அமைதி மற்றும் உண்மையான ஆட்சியின் முழு உருவமாகத் திகழ்ந்தார்கள்.

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த கீழ்த்திசை ஆய்வாளரான சர். வில்லியம் மூர் என்பவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை விரிவாக ஆய்வு செய்து, 'முஹம்மதின் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை எழுதினார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளை அவர் பின்வரும் சொற்களில் விவரித்தார்.

முஸ்லிம்களின் தீர்க்கதரிசியான முஹம்மது தமது ஆரம்ப கால வாழ்க்கை தொட்டே, தங்களது நன்னடத்தை மற்றும் நல்லொழுக்கத்தின் காரணமாக 'நம்பிக்கைக்குரியவர்' என்று அன்னாருடைய நகர மக்கள் அனைவராலும் அழைக்கப்பட்டார்.

எவ்வாறிருப்பினும், அன்னாரைக் குறித்து பிறரின் கூற்றை விடவும் முஹம்மது உயர்ந்தவராகவே இருக்கிறார். நீங்கள் அவரை அறிந்திருக்கவில்லை என்றால், அவரது வரலாற்றைப் பற்றி படித்திருக்கவில்லை என்றால் உங்களால் அவரைப் புரிய முடியாது. அந்த வரலாறு முஹம்மதுவை உலகின் தீர்க்கதரிசிகள் மற்றும் சிந்தனையாளர்களின் முன்வரிசையில் நிறுத்தியது. அவர் தமது அடியார்களை, அவர்களில் மிகவும் சாதாரணமானவர்களுடன் கூட, மிகவும் கண்ணியத்துடனும் மென்மையுடனும் நடந்து கொண்ட விதம், கண்டிப்பாக குறிப்பிட வேண்டிய அன்னாரது சிறந்த பண்புகளில் ஒன்றாகும். தம்மைச் சுற்றியுள்ள அனைவரின் அன்பைப் பெற வேண்டி – தன்னடக்கம், மனிதாபிமானம், கருணை, சுயநலமின்மை மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய பண்புகள் அவரது ஆன்மாவில் போற்றி பேணப்பட்டன.

அன்னார் உண்மை, அன்பிற்குரிய ஒரு நபராகவே அறியப்பட்டார்கள். ஆனால், அன்னார் தங்களது நபித்துவ வாதத்தை முன்வைத்தபோது, கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தார்கள். பதின்மூன்று ஆண்டுகளாக தங்களது சக மக்கத்துவாசிகளினால் துன்புறுத்தல்களுக்கும் பழிக்கூற்றுகளுக்கும் உள்ளானார்கள். அன்னாருடைய தோழர்கள் சித்திரவதை செய்யப்பட்ட காலமும், சில சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்ட காலமும் அதில் அடங்கும். அன்பிற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட விட்டு வைகக்கப்படவில்லை. அன்னார் தொழுது கொண்டிருக்கும் போது, அன்னாரின் மீது விலங்குகளின் குடல்கள் வீசப்பட்டன. தாயிஃப் நகரில் மக்களும் குழந்தைகளும், இரத்தம் வழிந்தோடும் வரை அன்பிற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கல்லெறிந்து கொண்டிருந்தது, அன்னாரின் மிகவும் ஆபத்தான தருணங்களில் ஒன்றாகும்.

இவை அனைத்தையும் சந்திக்க நேர்ந்த போதிலும், அன்னார் தமது காலத்தின் மிகவும் நேர்மையான மற்றும் கனிவான தலைவராக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறார்கள். அன்னாருக்கு ஆட்சியும் அதிகாரமும் வழங்கப்பட்ட போது, நீதியாலும் அமைதியாலும் நிர்வகிக்கப்படும் சமுதாயத்தை உருவாக்க அதனைப் பயன்படுத்தினார்கள். விரிவான மற்றும் நியாயமான நிர்வாகச் சட்டங்களை உருவாக்குவதன் மூலம் இது செய்யப்பட்டது.

ஓர் அறிவிப்பில் வருகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பதவிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டவர், நம்பிக்கையாளர்கள், அநீதியிழைக்கப்பட்டவர்கள் அல்லது ஏழைகளுக்கு எதிராக தனது கதவுகளை அடைத்து விட்டால், அவர் இன்னும் அதிக தேவையிலும் கடுந்துன்பத்திலும் இருக்கும் போது அல்லாஹ்வின் கருணையின் வாயில்கள் அவருக்கு எதிராகப் பூட்டப்பட்டிருப்பதைக் காண்பார்.

மக்களின் சுமையை இலகுவாக்குங்கள். அதனை அதிகப்படுத்தாதீர்கள். அவர்களுக்கு நம்பிக்கை அளியுங்கள்; அவமானத்தை அல்ல. ஒற்றுமைக்காகப் பாடுபடுங்கள்; பிளவுக்காக அல்ல.

எடின்பர் பல்கலைக்கழகத்தின் அரபி மற்றும் இஸ்லாமிய ஆய்வுத்துறையின் பேராசிரியரான வில்லியம் மாண்ட் கோமெரிவாட் பின்வருமாறு கூறினார்: தமது கொள்கை –களுக்காக எந்தத் துன்பத்தையும் சந்திக்க ஆயத்தமாக இருந்த அவர்களது (முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தன்மை, அவரின் மீது ஈமான் கொண்டு அவரைத் தங்களின் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தவர்களின் உயர்ந்த ஒழுக்க நிலை, அவருடைய இறுதி வெற்றியின் மகத்துவம் இவை அனைத்தும் அவரின் அடிப்படை நெறியை பறைசாற்றுகின்றன. முஹம்மது ஒரு ஏமாற்றுக்காரர் என்று நினைப்பது பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை. மாறாக, பிரச்சனைகளை அதிகரிக்கின்றது. மேலும் மேற்கத்திய உலகில் பெரிய மனிதர்களுள் முஹம்மதுவைப் போல் மிகக் குறைவாகப் பாராட்டப்பட்ட எவரும் வரலாற்றில் இல்லை.''

அமைதி மற்றும் உண்மையான ஆட்சியின் முழு வடிவத்தை வரலாற்றின் தலைசிறந்த தலைவரான நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் காணலாம்.

இஸ்லாமிய சட்டத்தின் முதன்மை ஆதாரங்கள் திருக்குர்ஆன், சுன்னா, இஜ்மா (ஒருமித்த கருத்து) மற்றும் கியாஸ் (ஒப்புமை) ஆகியவை ஆகும். இஸ்லாமிய ஃபிக்ஹ் மற்றும் நிர்வாகத்தின் கூறுகளை நாம் பார்த்தால், அது அடிப்படையில் ஆலோசனை, அரசியலமைப்பு மற்றும் சமரசம் ஆகிய மூன்று வகைகளின் கீழ் வருகிறது. நவீனகால ஜனநாயக ஆட்சி என்று பலரால் விவரிக்கப்படும் ஆட்சி முறைக்கு இவையே அடித்தளமாகும்.

இந்த மூன்று கூறுகளையும் மதீனா அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சுருக்கமாகக் கூறலாம். மதீனா அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு முக்கியமான கோட்பாடு என்ன –வென்றால், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மதீனா நகரத்தை அதன் குடிமக்களின் இணக்கத்துடன் நிர்வகித்தார்கள்.

கிறித்தவ ஆண்டு 622 –ல் மக்காவிலிருந்து யத்ரிபிற்கு குடிபெயர்ந்ததைத் தொடர்ந்து, நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பெரும் அரசியல் செல்வாக்கைப் பெற்றார்கள். எனவே இந்த செல்வாக்கைக் கொண்டு அன்னார் மதீனாவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்கள். இச்சட்டம் மதீனாவில் வாழும் அனைவருக்கும் மார்க்க சுதந்திரத்தை வழங்கும் ஒரு செயல்திட்டமாக உருவாக்கப்பட்டது. இதில் 57 அரசியல் சாசனங்கள் அடங்கும். இந்த சாசனங்கள் அரசாங்கம் மற்றும் குடிமக்கள் ஒருவருக்கொருவர் செலுத்த வேண்டிய உரிமைகள், கடமைகள் மற்றும் சலுகைகள் பற்றி குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக, 30 –வது சாசனத்தில் உடன்படிக்கை செய்து கொள்பவர்களின் தகுதிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நிச்சயமாக பனூ ஆஃப் பின் யூதர்களும் முஸ்லிம்களுடன் சேர்ந்து ஒரே சமுதாயமாகக் கருதப்படுவர் என்று அது கூறுகிறது.

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் பல்வேறு குழுக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக, கிறித்தவ மற்றும் யூத சிறுபான்மை குழுக்களுக்கு உறுதிமொழிகள், ஆவணங்கள் மற்றும் பரஸ்பர ஒப்பந்தங்கள் மூலம் உரிமைகள் வழங்கப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவு 'ஒரே தேசம்' என்ற கருத்தை நிறுவுகிறது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் உட்பட அனைத்து மதத்தினரும் தங்களின் மார்க்க நம்பிக்கைகள், இனம் மற்றும் குலம் கடந்து மதீனாவின் பாதுகாக்கப்பட்ட குடிமக்கள் ஆவர். அவர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் மார்க்கத்தை சுதந்திரமாகப் பின்பற்றலாம். அனைத்து அரபுக் கோத்திரங்களும் ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டதால் கோத்திரப் பூசல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. இந்த சாசனம் அனைவருக்காகவும் உருவாக்கப்பட்டதாகும். மேலும் முஸ்லிம் அல்லாதவர்கள் நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்பட வேண்டியதைக் கடமையாக்கியது. இந்த வரலாற்று சாசனம் மார்க்க மற்றும் சமூக சமத்துவமின்மையை ஒழித்தது. இது ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றில் காணப்படும் முதல் மனித உரிமைகள் சாசனம் ஆகும். மேலும் அனைத்து வளர்ந்த நாடுகளாலும் இன்று பயன்படுத்தப்படும் சட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் புனித கேத்தரின் மடலாயத்தின் பாதிரியார்களுக்கு சாசனம் வழங்கிய ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு கிறித்தவர்களுக்கான விடுதலை



ஆண்டாகக் கருதப்பட்டது. அச்செயல் கிறித்தவர் களுக்கு சலுகைகளையும் வசதிகளையும் உறுதி செய்தது. அன்னார் உண்மையில் அனைத்து மார்க்கங்களையும் வரவேற்றார்கள்.

ஓர் அறிவிப்பு வருகிறது: ஒருமுறை நஜ்ரானில் இருந்து கிறித்தவர்களின் தூதுக்குழு மதீனாவுக்கு வருகை தந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை மஸ்ஜிது நபவியில் தங்குவதற்கு வலியுறுத்தினார்கள். மேலும் பள்ளியிலேயே தங்கள் வழிமுறையில் வழிபாட்டைச் செய்து கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். நஜ்ரான் மக்களுக்கு வழங்கியதை விட சிறந்த உத்திரவாதங்களைப் பதவியில் இருந்த ஒருவர் வழங்கியதாக வரலாற்றில் எங்குமில்லை. அவர்களின் வாழ்க்கை, அவர்களின் மதம் மற்றும் அவர்களின் சொத்து என்ற பாதுகாப்பை அன்னார் அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் அவர்களின் மார்க்க நம்பிக்கையிலோ அல்லது அவர்களது சடங்குகளிலோ எந்தக் குறுக்கீடும் இருக்காது. எந்த சமயத் தலைவரும் பாதிரியாரும் அகற்றப்பட மாட்டார்கள். எந்த உருவமும் அல்லது சிலுவையும் அழிக்கப்படாது, அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள் என்று அன்னார் உறுதியளித்தார்கள்.



© Ahmadiyya Muslim Jamaat

ஒரு தலைவராக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு அரபு தீபகற்பத்தின் பொறுப்பை ஏற்று, அவர்களின் எதிர்காலத்தை ஒரு நிறுவப்பட்ட தேசமாக வடிவமைத்தார்கள். அன்னாருக்கு முன், அரேபியர்களுக்கு ஓர் ஒருமித்த தலைவரோ அல்லது அரசாங்க அமைப்போ இல்லாத பழங்குடியினராக இருந்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு நாட்டின் தலைமையின் கீழ் தேசத்தை வழிநடத்தியது மட்டுமல்லாமல், ஸ்பெயினில் இருந்தும் மத்திய ஆசியா மற்றும் வடமேற்கு இந்தியா வரை அந்த தேசத்தின் எல்லையை விரிவடையச் செய்வதற்கான வழிகாட்டுதலையும் அமைத்தார்கள்.

மதீனா அரசியலமைப்புச் சட்டத்தின் 39 –வது பிரிவு, அனைவரும் நிர்வாகத்தில் பங்களிப்பையும் உள்ளடக்கத்தையும் பெறுவதற்கு ஷூரா அமைப்பை ஏற்படுத்துகிறது. அது என்னவென்றால், அவர்கள் (ஒப்பந்ததாரர்கள்) பரஸ்பர ஆலோசனை மற்றும் அறிவுரையைப் பெற வேண்டும் என்பதாகும். பைஅத் அல்லது விசுவாச உறுதிமொழியின் வடிவத்தில் ஒப்புதல் முறைப்படுத்தப்பட்டது. இது ஆளப்படுபவர்களின் ஒப்புதலை முறைப்படுத்த முயன்ற ஒரு முக்கியமான அமைப்பாகும். அந்நாட்களில் ஓர் ஆட்சியாளர், முறையான மற்றும் நேரடியான விசுவாச உறுதிமொழி மூலம் சமூகத்தின் சம்மதத்தைப் பெறத் தவறினால் ஆட்சியாளரின் பதவி முழுமையாக அதிகாரப் பூர்வமாக்கப்பட்டது. நான்கு நேர்வழி பெற்ற குலஃபாக்கள் (குலஃபாயே ராஷிதீன்) பல்வேறு முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் நம்பிக்கையாளர்களின் சமுதாயத்துடன் வெளிப்படையான ஆலோசனை முறையும் ஒன்றாகும். ஆரம்பகால இஸ்லாமிய அரசியல் சிந்தனைகள் பலவிதமான நடைமுறைகளுக்குத் தயாராக இருந்தது என்பதை இது உணர்த்துகிறது.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட போது அன்னாரின் தொலைநோக்குப் பார்வை வெளிப்பட்டது. இந்த ஒப்பந்தம் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் அறிவிக்கப் –பட்ட நாடுகளுக்கு இடையேயான முதல் ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. மார்ச் 628 –இல் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம், மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையே ஒரு சமாதான உடன்படிக்கையைக் குறிக்கிறது. அச்சமயத்தில் நபிகளாரின் சீடர்கள் அந்த ஒப்பந்தத்தில் அவநம்பிக்கை அடைந்தாலும், இறுதியில் அது மக்காவின் சரணடைவிற்கு வழிவகுத்தது.

இந்த ஒப்பந்தம் நவீன சர்வதேச ஒப்பந்தங்களுக்கு ஒரு கலங்கரைவிளக்கமாக செயல்படுகிறது. இந்த ஒப்பந்தம் ஒரு திருப்புமுனையான நிகழ்வாகும். நான்கு பிரிவுகளைக் கொண்ட குறுகிய ஒப்பந்தமாக இருந்தபோதிலும், அது விரைவில் மிகுந்த விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு முக்கிய ஒப்பந்தமாக மாறியது. அதன் வடிவம் இன்று வரை சர்வதேச உறவுகளை வடிவமைப்பதாகவும் தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது.

அக்கால அரேபியர்களுக்கு இடையேயும் கோத்திரங் –களுக்கு இடையேயும் அமைதியான ஒற்றுமையை ஏற்படுத்திய பல்வேறு ஒப்பந்தங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்டங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ஏற்படுத்தப்பட்டனவாகும். அருள்மிக்க திருக்குர்ஆன் மறைநூல் மூலம், முஸ்லிமல்லாத மக்களுக்கு முழு உரிமைகளை இஸ்லாம் உறுதி செய்தது. மேலும் அதன் மூலம் அவர்களுக்கு முழு குடிமை உரிமைகளையும் வழங்கியது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அரசியல் வாழ்க்கையில் மூன்று நிகழ்வுகள் உள்ளன. மக்காவிலிருந்து மதீனாவுக்கு இடம் பெயர்தல், பனூ முஸ்தலிக் மீதான தாக்குதல் மற்றும் மக்கா வெற்றி. அவற்றில் இரண்டு நிகழ்வுகள் மிக முக்கியமானவை.



அபூதாவூதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ஹதீஸில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எச்சரிக்கையாக இருங்கள்! ஒரு முவாஹிதை (முஸ்லிம் நிலத்தில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்) ஒடுக்கினாலோ அல்லது அவரது உரிமைகளைப் பறித்தாலோ அல்லது அவரால் தாங்க முடியாத வலியை உண்டாக்கினாலோ, அல்லது அவருடைய அனுமதியின்றி அவரிடமிருந்து எதையும் எடுத்துக் கொண்டாலோ, அப்படிப்பட்ட ஒருவரு(முஸ்லிம்)க்கு எதிராக தீர்ப்புநாளில் நான் போராடுவேன்.''

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஏழைகளின் தேவைகளையும் செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகளையும் உணர்ந்திருந்தார்கள். அன்னார் வரிவிதிப்பு முறையை (ஸகாத்) உருவாக்கினார்கள். அந்த அமைப்பில் திரட்டப்பட்ட செல்வங்கள் ஏழை மற்றும் வாய்ப்பற்றவர்களுக்கு விநியோகிக்கப்படும். பணக்காரர்களுக்கு வரிவிதிக்கப்படும்; ஏழைகளுக்கு விதிக்கப்படாது. பொருளாதார நீதி மற்றும் சமத்துவச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் பொருளாதாரம் அமைந்தது என்பது இதன் பொருளாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சமுதாயத்தில் இருந்த ஏழை வகுப்பினரின் மானமும் மரியாதையும் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்காக செலவழித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை நடைமுறையில் மேம்படுத்தினார்கள்.

உண்மையில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெருந்தன்மைக்கும் கருணைக்கும் சிறந்த உதாரணம் ஆவார்கள். அல் புகாரியில் பின்வரும் செய்தி கூறப்பட்டுள்ளது:

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் ஒரு மனிதர் அன்னாரை அணுகினார். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெருந்தன்மையான குணத்தை அந்த மனிதர் நன்கு அறிந்திருந்தார். தனது அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்க அவர் அன்னாரது முழு ஆட்டு மந்தையையும் தனக்குக் கொடுக்குமாறு தூதரிடம் கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அனைத்தையும் அவருக்குக் கொடுத்தார்கள். அந்த மனிதர் நற்செய்தியுடன் தனது மக்களிடம் திரும்பி வந்து, ''என் மக்களே! வறுமைக்கு அஞ்சாதவரைப் போல முஹம்மது தானம் கொடுக்கிறார். எனவே இஸ்லாத்தில் நுழையுங்கள்'' என்று கூறினார்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''ஒரு மனிதர் உலக நன்மையை மட்டுமே நாடி இஸ்லாத்தில் நுழைய முடியும். ஆனால் அவர் இஸ்லாத்தில் நுழைந்த பிறகு அது அவருக்கு உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் விட மிகவும் பிரியமானதாக மாறும்'' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்த காலத்தில் ஒருமுறை ஹஸ்ரத்

மதீனாவிற்கு இடம் பெயர்தல் மற்றும் மக்கா வெற்றி ஆகியனவாகும். இஸ்லாமிய அரசின் தலைநகரமாக மதீனா அறிவிக்கப்பட்டது. இஸ்லாமிய ஆட்சிப் பரப்பின் பல்வேறு பகுதிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பணியின் தன்மையை அதிகாரி அறிந்திருக்க வேண்டும் என்பது நியமனத்தின் அடிப்படை தேவையாகும். பணியின் தன்மையைப் புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வருவதையும், குர்ஆன் மற்றும் சுன்னத்தின்படி எந்த முடிவையும் எடுக்க வேண்டிய கடமையை அவர்களுக்கு உணர்த்துவதையும் அரசாங்கம் உறுதிசெய்து. அரசின் தலைவர் நபி (ஸல்) அவர்கள், அத்தகைய அதிகாரிகளை நியமிக்கும்போது இரத்த உறவுகளையோ சமூக செல்வாக்குகளையோ கருத்தில் கொள்ளவே இல்லை. எதிர்காலத்தில் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியான தரத்தை அன்னார் (ஸல்) அவர்கள் அமைத்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் காலத்தில் நடைமுறைப்படுத்திய நிர்வாகத்தின் அதே அளவுகோல்களையே, சம கால தேசிய அரசுகள் பின்பற்றின. அத்தகைய நியமனங்களுக்கு, நியமனத்தை அல்லது பொறுப்பை அறிவிப்பதற்கு முன், அன்னார் தமது தோழர்களுடன் கலந்தாலோசித்து அதிகாரியின் தன்மையை சரிபார்த்து வந்தார்கள்.

அன்பிற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இன்றைய நவீன மாநிலங்களில் பொதுவாகக் காணக்கூடிய அனைத்து வகையான நிர்வாகத் தவறுகள் அல்லது ஊழலிலிருந்து அரசாங்கத்தைத் தூய்மைப்படுத்தினார்கள். இந்த நோக்கத்திற்காக அன்னார் மக்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் ஆன்மீகரீதியாகவும் சமூகரீதியாகவும் தூய்மைப்படுத்தினார்கள். இவ்வாறு அன்னாரால் தமது தோழர்களுக்கு சரியான பயிற்சியையும் வழிகாட்டலையும் கொடுக்க முடிந்தது. இயற்கையின் இந்த நடைமுறைச் சட்டங்களை உண்மையான நீதியுடன் செயல்படுத்துதல் மற்றும் உண்மையான மிதவாதம் ஆகியன அரசாங்கத்தை உலகின் பிற பகுதிகளுக்கு ஒரு முன்மாதிரியாக மாற்றியது.

உமர் (ரலி) அவர்கள் அன்னாரைச் சந்தித்தார்கள். எந்த வசதியுமே இல்லாத அந்த இடத்தைக் கண்டு வியந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சிறிய அறையில் ஒரு தளர்வான துணியை உடம்பில் சுற்றிக் கொண்டு அமர்ந்தார்கள். ஒரு வெறுமையான படுக்கை இருந்தது. மேலும் படுக்கையின் தலையில் பேரீச்சம்பழ இலைகள் நிரப்பப்பட்ட தலையணை இருந்தது. ஒரு மூலையில் கொஞ்சம் வாற்கோதுமை(பார்லி)யும், மற்றொரு மூலையில் தண்ணீரைச் சேமித்து வைத்திருக்கும் விலங்குகளின் தோல்களும் இருந்தன. மன்னர்களின் மன்னர் வாழும் அந்த இடத்தின் எளிமையைப் பார்த்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மனம் வெதும்பி கண்ணீர் வழிந்தது. ''உமரே! ஏன் அழுகிறீர்கள்?'' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: ''நான் ஏன் அழக்கூடாது? உங்கள் உடம்பில் கட்டில் கயிறுகளின் அச்சுகளை என்னால் பார்க்க முடிகிறது. ஒரு பக்கம் தங்களுடைய எளிமையான பொருட்களைப் பார்க்கிறேன். மறுபுறம் எகிப்து மற்றும் பாரசீக மன்னர்களின் ஆடம்பரத்தை நான் கற்பனை செய்கிறேன். அவர்கள் இவ்வளவு இலகுவான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இவ்வளவு கஷ்டத்தில் வாழ்கிறீர்கள்!

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''உமரே! அவர்கள் இவ்வுலகை எடுத்துக் கொள்வதையும், நான் மறுமையைப் பெறுவதையும் நீங்கள் விரும்பமாட்டீர்களா?'' எனப் பதில் அளித்தார்கள். (சஹீஹ் முஸ்லிம்)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதனை தங்களது மனதிற்கு நெருக்கமான ஒன்றாக எடுத்துக் கொண்டு தங்களது சொந்த கிலாஃபத் காலத்தில் இதை நடைமுறைப்படுத்தினார்கள். எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த அவர்கள் அனைத்து குடிமக்களின் உரிமைகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்தார்கள். அன்னாரது கிலாஃபத் காலகட்டத்தில், இஸ்லாமிய அரசு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது. மார்க்க சிறுபான்மையினர் முழு சுதந்திரத்தையும் சமூக உரிமையையும் அனுபவித்தது இவ்வளர்ச்சியில் முக்கிய பங்காகும். அவர்கள் சமமான குடியுரிமையையும் அனுபவித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நகரத்தில் கணக்கு வழக்குத் துறையின் தலைவராக ஒரு கிறித்தவர் நியமிக்கப்பட்டார் என்பது வரலாற்று ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் பொருளாதார, நிர்வாக மற்றும் இராணுவ விஷயங்கள் முஸ்லிம் அல்லாத சமூக மக்களுடன் கலந்தாலோசிக்கப்படும். குறிப்பாக அவர்களுக்கு நேரடியாகச் சார்ந்ததாக இருக்கும்போது கலந்தாலோசிக்கப்படும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது ஒரு யூதரின் நிலத்தைக் காலி செய்து அந்த இடத்தில் ஒரு பள்ளிவாயில் கட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தை அறிந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பள்ளிவாயிலை இடிக்க உத்தரவிட்டு, நிலத்தை அதன் அசல் உரிமையாளரிடம் திரும்பக் கொடுத்தார்கள். இன்றளவும் உள்ள இந்த வீடு (மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலத்துடன்) பைத்துல் யஹூதி என்று அழைக்கப்படுகிறது. மேலும் நன்கு பிரசித்தி வாய்ந்ததாகும்



என்ற ஒரு லெபனான் கிறிஸ்தவ அறிஞர், பேராசிரியர் கர்தாஹி **1933 –**இல் எழுதினார்.

ஸைத் பின் அஸ்லம் (ரலி) அவர்களின் தந்தை ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஹர்ராவாகிமுக்குச் சென்றதாக அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்கள், சாரார் என்ற இடத்தை அடைந்தபோது அங்கு ஒரு தீப்பந்தம் கொழுந்து விட்டு எரிவதைக் கண்டார்கள். அவர்கள் வேகமாக அதை நோக்கிச் சென்று ஒரு பெண் தன் குழந்தைகளுடன் இருப்பதைப் பார்த்தனர். அங்கு ஒரு பானை நெருப்பில் வைக்கப்பட்டிருந்தது. அவளுடைய குழந்தைகள் பசியால் கதறி அழுதனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அருகில் வர அனுமதி கேட்டார்கள். அந்தப் பெண், 'உங்கள் எண்ணம் நல்லதாக இருந்தால் வரலாம். இல்லையெனில், நீங்கள் திரும்பிச் செல்லலாம்' என்று பதிலளித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'குழந்தைகளுக்கு என்ன நேர்ந்தது? ஏன் அழுகின்றார்கள்?' எனக் கேட்டார்கள். அந்தப் பெண், 'அவர்கள் பசியால் அழுகின்றனர்' எனப் பதிலளித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவளிடம், 'அந்தப் பானையில் என்ன இருக்கின்றது?' எனக் கேட்டார்கள். அதற்கு அவள், 'வெறும் தண்ணீர்தான் அதில் இருக்கின்றது' எனப் பதிலளித்தார். நான் குழந்தைகளைத் தூங்குவதற்காகத் தேற்றிக்

கொண்டிருக்கின்றேன். எங்களுக்கும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் இடையில் அல்லாஹ் தீர்ப்பு அளிப்பான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'பெண்ணே! அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக. எவ்வாறு உமருக்கு உம்முடைய சூழ்நிலைகள் தெரியவரும்' எனக் கேட்டார்கள். அதற்கு அவள், 'அவர் எங்களது பாதுகாவலர் ஆவார். ஆனாலும் அவருக்கு எங்களது நிலைமைகள் தெரிவதில்லை' எனப் பதிலளித்தார். உடனே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தமது தோழரை அழைத்துக் கொண்டு தங்களது கிலாஃபத்தின்போது கட்டப்பட்ட பயணிகளுக்கான உணவுக்களஞ்சியமான தார்–உல்–தகீகுக்கு விரைந்தார்கள். அன்னார் அங்கிருந்து ஒரு தானிய மூட்டையையும் நெய் ஜாடியையும் எடுத்துக் கொண்டார்கள். உங்களுக்காக நான் அதைச் சுமக்கின்றேன் என்று அந்தத் தோழர் கூறினார். அதற்கு மறுமை நாளில் நீர் என் சுமையைச் சுமப்பீரா என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அன்னார் அந்தப் பெண்மணியையும் அவளுடைய குழந்தை–களையும் அடையும் வரை மிக வேகமாக நடந்தார்கள்.

அன்னார் ஆட்சியாளராக இருந்த காலகட்டம் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் போதனைகளின் உண்மையான பிரதிபலிப்பாக விளங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது தோழர்களுக்கும் தம்மைப் பின்பற்றுபவர்–களுக்கும் எப்போதும் பணிவு உணர்வைக் கற்பிக்க முழு முயற்சி செய்தார்கள். சரக்குகள் மற்றும் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்யுமாறு அன்னாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அல்லாஹ்வே விலையை நிர்ணயிக்கின்றான் என்று கூறி அன்னார் மறுத்து விட்டார்கள். அவன் குறைக்கின்றான். மேலும் அவன் பெரிதாக்குகின்றான். அவனே வழங்குபவன். நான் எனது இறைவனைச் சந்திக்கும்போது உங்களது உயிரிலோ, உடைமையிலோ நான் அநீதி இழைத்ததாக உங்களில் யாரும் என் மீது குற்றம் சாட்டக் கூடாது என நான் அஞ்சுகிறேன்.

மாநபி (ஸல்) அவர்கள் மனிதனின் பொதுவான சட்டங்களை வரையறுத்தது மட்டுமல்லாமல், போர் செய்வதற்கான விரிவான வழிகாட்டு–தலையும் உருவாக்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இராணுவத் தளபதிகளை நியமித்து போரின்போது கடைபிடிக்க வேண்டிய மனிதாபிமானத்தின் வழிகளையும் விதிகளையும் வகுத்தார்கள். இயற்கையையோ அல்லது கால்நடை–களையோ ஒருபோதும் சேதப்படுத்தக் கூடாது. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோரை மதிக்க வேண்டும். போருக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்று அறிவிப்பவர்–களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கக் கூடாது. இறந்தவர்களை ஒருபோதும் அவமதிக்கக் கூடாது. அவர்கள் எப்போதும் கண்ணியமான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும் ஆகியன இந்த விதிகளில் அடங்கும்.



முஸ்லிம் அல்லாதவர்களும் கூட முஸ்லிம் படைகளில் பணியாற்றினர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யுமாறு வற்புறுத்தப்படவில்லை. மேலும் அவ்வாறு சேர விரும்பியவர்கள் சுய விருப்பத்துடன் சேர்க்கப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் இத்தகைய கொள்கைகளை வகுத்தது. மேலும் மனித உரிமைகள் சாசனத்தின் பல்வேறு நிலைகளில் அதே கொள்கைகளை அறிவித்தது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்ததாக தாவூது மற்றும் நஸயீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் பாதையில் ஒருவர் போருக்காகப் புறப்படுகிறார்; அவர் உலகத்தின் சில நன்மைகளையும் நாடுகிறார். அத்தகையவரின் நிலை என்ன என்று ஒரு மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அப்படிப்பட்டவர் எந்தத் தகுதியையும் பெறமாட்டார் என்று அன்னார் கூறினார்கள். மேலும் இதை மூன்று முறை திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

உலக அமைதிக்கான தேடலில் மாநபி முஹம்மது (ஸல்) அவர்கள் அக்கால மன்னர்கள், நாட்டின் ஆட்சியாளர்கள் மற்றும் பிரபுகளுக்கு இஸ்லாத்தை அதன் உலகளாவிய செய்தியின் காரணமாக ஏற்றுக் கொள்ளுமாறு கடிதங்கள் எழுதினார்கள். தாம் எந்தவொரு செல்வத்தையும் அரச அதிகாரத்தையும் நாடவில்லை என்றும், மாறாக கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்பட்ட முதல் சமூகத் தொடர்புக்கு மக்களை மீண்டும் கொண்டு வர மட்டுமே விரும்புவதாகவும் அன்னார் தமது கடிதப் பரிமாற்றத்தில் தெளிவுபடுத்தினார்கள்.

இந்த மரபை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் முன்னெடுத்துச் சென்றார்கள். மேலும் தற்போதய காலத்தில் அன்பிற்குரிய ஹுஸூர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்களால் இந்த மரபு தொடர்கிறது.



இன்றும் கூட மார்க்க மற்றும் மதச்சார்பற்ற சிந்தனையாளர்களால் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு நீடித்த பாரம்பரியத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னார் முன்மாதிரியான பண்புகளைக் கொண்ட ஒரு பணிவன்புள்ள மனிதராக அறியப்படுவதோடு மட்டுமல்லாமல் ஒரு நேர்மையான அரசியல் தலைவராகவும் தனித்து நின்கின்றார்கள்.

1856 முதல் 1950 வரை வாழ்ந்த ஜரிஷ் நாடக ஆசிரியர், விமர்சகர் மற்றும் அரசியல் ஆர்வலரான ஜார்ஜ் பெர்னார்ட்ஷா பின்வருமாறு கூறினார்:

“உலகிற்கு முஹம்மதுவின் சிந்தனையைக் கொண்ட ஒரு மனிதரின் தேவை அவசியமாக உள்ளது. இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்த மார்க்க நம்பிக்கை கொண்ட மக்கள் தங்களின் அறியாமை மற்றும் தப்பெண்ணத்தின் காரணத்தால், அவரைக் கிறித்தவத்தின் எதிரியாகக் கருதியதால், அவரை மிகவும் மோசமான முறையில் சித்தரித்தனர். ஆனால் இந்த மனிதரின் வாழ்க்கையைப் பார்த்த பிறகு, அது ஓர் அற்புதமான மற்றும் அதிசயமான ஒன்றாக இருப்பதைக் கண்டேன். மேலும் அவர் ஒருபோதும் கிறித்தவத்தின் எதிரி அல்ல. மாறாக மனித குலத்தின் மீட்பர் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். என் கருத்தின்படி, இன்று உலகத்தின் மீது அவருக்கு அதிகாரத்தைக் கொடுத்தால், அவர் நம் பிரச்சனைகளைத் தீர்த்து, உலகம் ஏங்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் உறுதிப்படுத்துவார்.”

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் பேச்சு சுதந்திரத்தை எப்போதும் ஆதரித்தார்கள். ஏனெனில் அந்த சுதந்திரமே இஸ்லாத்திற்குத் தமது அமைதிச் செய்தியைப் போதிப்பதற்கு வாய்ப்பளித்தது. அதே சுதந்திரம் தான் ஐரோப்பா முழுவதிலும் உள்ள முஸ்லிம்கள் தங்கள் நம்பிக்கையை எந்த இடையூறுமின்றி கடைபிடிக்கவும் பரப்பவும் அனுமதிக்கிறது. துரதிஷ்டவசமாக நபிமார்களின் கருணை மற்றும் கனிவு பற்றிய செய்திகள் நவீனகால மத வெறியர்களால் களங்கப்படுத்தப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில், நமது அன்பிற்குரிய ஹுஸூர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் உரையாற்றும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளைப் பற்றியும், குறிப்பாக மனித இனத்தின் மீது அன்னார் கொண்டிருந்த நேசத்தைப் பற்றியும் உரை நிகழ்த்தினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: “மனித குலத்திற்குச் சேவை செய்யவும், மனித குலத்தின் உரிமைகளை நிறைவேற்றவும் வேண்டும் என்ற ஆவலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது வாழ்நாள் முழுவதும் அதற்காக எந்நேரமும் தயாராக இருந்தார்கள். இறைவனின் தூதர் என்பது மிகப்பெரிய பொறுப்பும், கற்பனை செய்து பார்க்க இயலாத கடினமான பணியும் ஆகும். அவ்வாறு ஆன பின்பும், எந்த நேரத்திலும் மனித குல சேவைக்காக எவர் தம்மை அழைத்தாலும், அவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி, மனித குலத்திற்கு சேவை செய்வதற்கான அவர்களின் முயற்சியில் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவேன் என்று கூறினார்கள்.”

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அர்ப்பணம் மிக்க மற்றும் முழுமையான அடியாரான வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகளால் நமது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய குறிப்புகளை நிறைவு செய்வது பொருத்தமானதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: “அகத்தூய்மை, பரந்த சிந்தனை, கற்பு, அடக்கம், நேர்மை மற்றும் இறைநம்பிக்கை ஆகியவற்றில் அனைத்து நபிமார்களையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலானவர்களாக இருந்த காரணத்தால், வல்லமைமிக்க இறைவன் மற்ற நபிமார்களை விட சிறப்புப் பண்புகளின் வாசனை திரவியத்தால் அன்னாரை அலங்கரித்தான். அன்னாரது உள்ளமும் ஆன்மாவும், அன்னாருக்கு முன் சென்றவர்கள் மற்றும் அன்னாருக்குப் பின் வரவிருந்த அனைவரின் உள்ளங்களையும் ஆன்மாக்களையும் விட பரந்ததாகவும், தூய்மையானதாகவும், அறவே கலப்படமற்றதாகவும், மிக்க ஒளிமயமானதாகவும், இறைவனை அதிகமாக நேசிக்கக் கூடியதாகவும் இருந்தது. அன்னாருக்கு முன்பிருந்தவர்களுக்கும் அன்னாருக்குப் பின்வருபவர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டை விட வலிமையானதும், பூரணமானதும், மிக உயர்ந்ததும் முழுமையானதுமான, மேலும் இறை பண்புகளைப்

பிரதிபலிக்கக்கூடிய தெளிவான பெரிய கண்ணாடியாக விளங்கிய அத்தகைய இறைவெளிப்பாட்டைப் பெறுவதற்கு அன்னார் மிகவும் தகுதியானவராகக் கருதப்பட்டார்கள்.''

ஆனால் சிறந்த புகழும் இறுதித் தீர்ப்பும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரியது. அவன் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

''இதோ, அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின் மீது அருளைப் பொழிகிறார்கள். நம்பிக்கை கொண்டவர்களே! அவருக்காக அருளை வேண்டுங்கள் மற்றும் தகுதியான வாழ்த்துக்களால் அவரை வாழ்த்துங்கள்.''

# துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஒரு வழிமுறை



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

சில சமயங்களில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இதுபோன்ற சமயங்களில் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான ஒரு வழிமுறை என்னவென்றால், ஒரு நல்லடியாரிடம் உங்களுக்காக துஆ செய்யுமாறு கூறி விட்டு, அந்த நல்லடியாரின் துஆக்களை ஏற்றுக் கொள்ளுமாறு அல்லாஹ்விடம் துஆ செய்வதாகும்....

ஒருமுறை பாவா குலாம் ஃபரீத் நோயுற்ற சமயத்தில் அவர் துஆ செய்தபோதும் அவரது ஆரோக்கியத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பிறகு அவர் தமது ஒரு சீடரிடம் தமக்காக துஆ செய்யுமாறு கூறினார். அவரது சீடர் (ஒருவேளை அவர் ஷேக் நிஜாமுத்தீன் (ரஹி) அல்லது காஜா குத்புத்தீன் (ரஹி) ஆவார்.) மிகவும் தீவிரமாக துஆ செய்தார். ஆனால் அதனால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இந்நிலையில் பாவா ஃபரீத் சாஹிப் ஓர் இரவில் மிகவும் உணர்ச்சிமிக்கவராக இவ்வாறு துஆ செய்தார்கள். ''இறைவா! எனது சீடருக்கு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதலின் மிக உயர்ந்த அந்தஸ்தை வழங்குவாயாக. எந்த அளவுக்கெனில் அவரது துஆக்கள் உன்னால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.''

மறுநாள், அவர் தமது சீடரிடம் இவ்வாறு, தாம் துஆ செய்ததாகக் கூறினார். அதைக் கேட்டதும் அவரது சீடர் மிகவும் அனுதாபம் கொண்டவராக தன் உள்ளத்தில், ''எனக்காக இவர் இந்த அளவு துஆ செய்துள்ளதால், நானும் அவருக்காக துஆ செய்வேன்'' என்று எண்ணினார். அவர் மிகவும் தீவிரமாக மிகவும் மன்றாடியவாறு துஆ செய்தார். அதன் விளைவாக பாவா குலாம் ஃபரீத் நோயிலிருந்து குணமடைந்தார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 234)

# உண்மையான பொருளும் விளையாட்டுப் பொருளும்



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நல்லொழுக்கத்தை மேம்படுத்தவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அன்பு, நேசத்தை உலகில் ஏற்படுத்தவும், மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை தொடரச் செய்யவும் வந்துள்ளார்கள். இந்த விஷயத்தை, சஹாபிகள் எவ்வாறு பாதுகாத்தார்களோ அவ்வாறு நாம் பாதுகாக்க வேண்டும். இதனை எப்போதும் நாம் கவனத்தில் வைக்க வேண்டும். நமக்கும் ஏனைய சமுதாயங்களுக்கும் இடையில் எப்படிப்பட்ட வேறுபாடு இருக்க வேண்டும் எனில், நாம் இந்த 'அமானத்' –ஐ நிலைபெறச் செய்திருக்கிறோம் என்பது வெளிப்படையாகத் தெரிய வர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் இப்படிப்பட்ட ஒரு ஜமாஅத் இருந்தது. ஆனால், வருங்கால சந்ததிகளிடம் இப்படிப்பட்ட உணர்வு இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. ஒருவருக்குக் கிடைத்த ஒரு நல்ல பொருள் அவருடைய பிள்ளைகளுக்குத் தடுக்கப்படுவதை எந்தவோர் அறிவாளியும் விரும்பமாட்டார்.

பிறகு, எவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனையின் மதிப்பையும் கண்ணியத்தையும் அறிவாரோ அவர், அது தனது வாரிசுகளுக்குக் கிடைக்க வேண்டாம் எனவும், அல்லது அவரது நிலம், அவரது வீடுகள் அவரது வாரிசுகளுக்குக் கிடைக்க வேண்டும் எனவும் கருதுவாரா? 'உலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையுமே ஆகும்' (6:33) என்று அல்லாஹ் கூறுகிறான். இவை அனைத்துமே விளையாட்டுப் பொருள்களாகும். இது எப்படிப்பட்டதென்றால் கால்பந்து, கிரிக்கெட், ஹாக்கி போன்றதோகும். பிறகு அரசாங்கம் அவரது நிலம், வீடு, சொத்துக்களையெல்லாம் அபகரித்து விட்டு கவணை அவரது பிள்ளைக்குக் கொடுத்தால் அல்லது உடைந்த கால்பந்தை அவனுடைய பிள்ளைக்குக் கொடுத்தால் அல்லது உடைந்த டென்னிஸ் ராக்கெட்டை அல்லது உடைந்த ஹாக்கி மட்டையை அவனுடைய பிள்ளைக்குக் கொடுத்தால் அதனை அவர் விரும்புவாரா? அல்லாஹ் கூறுகிறான்: உலக வாழ்க்கை கேளிக்கையைப் போன்றதாகும். உலகத்திற்கும் மார்க்கத்திற்கும் உள்ள வேறுபாடு உண்மையான பொருளுக்கும் விளையாட்டுப் பொருளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

தனது பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த சொத்து கிடைக்க வேண்டாம்; விளையாட்டு கேளிக்கைக்கு உரிய பொருள் கிடைத்தால் போதும் என விரும்புபவர் நம்மிடம் இல்லையா? அவர்களது மகன் பொய் கூறினாலோ, திருடினாலோ அல்லது வேறு ஏதேனும் குற்றம் செய்தாலோ அதனை ஆதரிக்கின்றனர். (ஆனால்) பிள்ளைகளுக்கு மார்க்கக்கல்வி புகட்டுவதிலிருந்து தவிர்ந்திருக்கின்றனர்....

நினைவில் கொள்ளுங்கள்! எவர் தனது பிள்ளைகளுக்கு நல்லொழுக்கங்களை கற்பிக்க மாட்டாரோ அவர் பிள்ளைகளையும் எதிர்க்கின்றார்; ஜமாஅத்தையும் எதிர்க்கின்றார்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் எதிர்க்கின்றார்; இறைவனையும் எதிர்க்கின்றார்.

(ஜுமுஆ குத்பா 29.11.2013)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam